28th January 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 16 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com



# நிகழ்நிலை சட்ட மூலம் சட்ட விரோதம்

## கைச்சாத்தை தாமதிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

பாராளுமன்றத்தில் கடந்த 24ம் திகதி வியாழனன்று நிறைவேற்றப்பட்ட ஒன்லைன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட முறை சட்டவிரோதமானது என்பதனால் சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்குவதை தாமதிக்குமாறு எதிர்கட்சிகளின் கூட்டு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதே நேரம் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த திருத்தங்களை அரசு உள்வாங்காததனால் கட்சி தலைவர்களது கூட்டமொன்றை கூட்ட வேண்டும் என்று எதிர்கட்சிகள் கோரிக்கை விடுக்கவுள்ளது. இச் சட்டமூலம் தொடர்பாக 31 சர்த்துக்கள் திருத்தப்பட வேண்டும் என

02ம் பக்கம்பார்க்க...

## குறைபாடுகள் குறித்து தீவிரமாக ஆராய்வு மீள் பரிசீலனையின் பின்பே கைச்சாத்து

### சபாநாயகர் அறிவிப்பு!



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள் உரிய வகையில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக ஆராயவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

02ம் பக்கம்பார்க்க...

## பேரீச்சம் பழங்களை தந்துதவுமாறு நாடுகள் அமைப்புகளிடம் கோரிக்கை வரிச்சலுகை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

### பணிப்பாளர் பைசல் தெரிவிப்பு!





முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் முஸ்லிம் நாடுகளிடமும், பல சர்வதேச முஸ்லிம் அமைப்புக்களிடமும் இலங்கைக்கு பேரிச்சம் பழங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டிருப்பதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் தெரிவித்தார். இவ்வருட நோன்பிற்காக சவுதி அரேபியா இம்முறையும் இலங்கைக்கு 50 டொன் பேரீச்சம் பழங்களை அனுப்பி வைக்கவுள்ளது என இலங்கையில் இருக்கின்ற சவுதி அரேபியா தூதுவர் காலித் ஹமூத் என் அல் கத்தானி

02ம் பக்கம்பார்க்க...

## வெளிநாடுகளில் வசித்து வரும் நான்கு இலங்கையர்களுக்கு பிடியாணை

### அல்கொய்தா வுக்கு உதவியதாக குற்றச்சாட்டு

அல்கொய்தா பயங்கரவாத அமைப்புக்கு உதவி வரும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள, தற்போது வெளிநாட்டில்

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி ரணிலின் 19வது வெளிநாட்டு பயணம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெப்ரவரி மாதம் 18ம் திகதி

02ம் பக்கம்பார்க்க...

## வெலிகம பாரி அரபுக் கல்லூரி ஓரிரு நாட்களில் திறப்பு

### தெரிவிக்கிறார் பணிப்பாளர் பைசல்

கல்பொக்க வெலிகமயில் அமைந்துள்ள 140 வருட கால வரலாற்றைக் கொண்ட அரபுக் கல்லூரியில் மாணவர் ஒருவரை அங்கு போதிக்கும்

02ம் பக்கம்பார்க்க...

## சிறுவர்களுக்கு எதிராக 5000துன்புறுத்தல்கள்

### 4000 பாலியல் குற்றச் செயல்கள்; 167 சிறுமிகள் கர்ப்பம்!

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுக அதிர்ச்சி தகவல்!!

நாட்டில் கடந்த ஆண்டு பாலியல் துன்புறுத்தல் உள்ளடங்கலாக சிறுவர்களுக்கெதிராக 5000 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 4000க்கும் மேற்பட்ட குற்றச் செயல்கள் பாலியல் துன்புறுத்தல்களுடன் தொடர்புடையவையாகும் என பொலிஸ்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை





இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு இந்திய இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வு உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில் நடைபெற்றது,அமைச்சர் ஹரிஷ் பெர்னார்ட் பிரதம அதிதியாக கலந்து கொண்டார் படங்களில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் காணலாம்.

## வெளிநாடுகளில்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக கூறப்படும் நான்கு சந்தேகநபர்களை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசிங்க நேற்று ஆங்கிலத்தில் சிவப்பு பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையின் பேரில் இந்த சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது அவுஸ்திரேலியா மற்றும் சிரியாவில் வசிப்பதாக கூறப்படும் கலேலிய, கலகெடி ஹென்வெல பிரதேசங்களை சேர்ந்த தந்தை மற்றும் மகன் மற்றும் இருவருக்கு எதிராகவே இந்த சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அஹமட் கலீல் லுக்மான் தாலிப், அஹ்மான் லுக்மன்ட் ஹலீன், அப்துல் பஹின் மொஹமட் லெப்பே மற்றும் மொஹமட் பாஹிர் ரிப்பன் ஆகிய நால்வருக்கு எதிராகவே சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, 2021 ஆம் ஆண்டில் 16 சந்தேகநபர்களுக்கு எதிராக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் வழக்கைப் பதிவு செய்தனர்.

## சிறுவர்களுக்கு...
(முன் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுதந்தர தெரிவித்தார்.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களில் 167 சிறுமிகள் கர்பந்தரித்துள்ளதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுதந்தர சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2023ஆம் ஆண்டில் சிறுவர்களை கொலை செய்தல், கொலை முயற்சி, காயப்படுத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல் உள்ளிட்ட 3074 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. இவை தவிர பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட 1463 சிறு குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன. இவ்வாறு பாலியல் துன்புறுத்தல் உள்ளடங்கலாக கடந்த ஆண்டு சுமார் 5000 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன.

ஏனைய குற்றச் செயல்கள் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் பாரியளவில் அதிகரிக்காத போதிலும், பாலியல் குற்றச் செயல்கள் அதிகரித்த போக்கினையே காணபிக்கின்றன.

அதற்கமைய 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கெதிரான 1502 பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களுக்கெதிரான 584 பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பில் 70 குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களின் போது 167 சிறுமிகள் கருத்தரித்துள்ளனர். இவர்களில் 127 பேர் தமது காதலர்களால் இந்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைக்கு உள்ளாகும் பெரும்பாலான சிறுமிகளின் குடும்ப பின்னணி இதில் பாரியளவில் தாக்கம் செலுத்துகின்றது.

சில சந்தர்ப்பங்களில் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் காதல் உறவைப் பேணுவதற்கு அவர்களது பெற்றோரால் எவ்வித எதிர்ப்புக்களும் வெளியிடப்படாமையும் இனங்காணப்பட்டுள்ளது.

பெற்றோர்களுக்கிடையிலான பிளவுகளும் சிறுவர்கள் இவ்வாறு தவறான வழிகளில் செல்வதில் தாக்கம் செலுத்துகின்றது. தற்போது பொலிஸ் திணைக்களத்தின் கீழுள்ள 607 பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் 605 பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு காணப்படுகிறது. இவை தவிர தேசிய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவினால் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய அப்பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து சிறுவர்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் தொடர்பான தகவல்களை வழங்க முடியும். இதன் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களின் இரகசியத்தன்மை நிச்சயம் பேணப்படும் - என்றார்.

தேசிய சுதந்திரத்தை முன்னிட்டு எதிர்வரும் 04.02.2024 அன்று காலை 5.45 மணிக்கு முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுதந்திர தினத்தை முன்னிட்டு இடம்பெறும் பிரார்த்தனை நிகழ்வு கொழும்பு 11 ஜாமிஉல் அல்பர் (சம்மன்கோடு) ஜூம்ஆப் பள்ளிவாசலில் ஏற்பாடாகியுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி சப்ரி உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## ஜனாதிபதி...
(முன் பக்கத் தொடர்ச்சி)

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். இது அவர் பதவியேற்ற பின் மேற்கொள்ளப்படும் 19வது வெளிநாட்டு விஜயமாகும்.

ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணம் பற்றி எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா மற்றும் ஜே.வி.பி தலைவர் அனுர குமாரா திசாநாயக்க விமர்சன ரீதியாக கருத்துக்களை தெரிவித்துவருகின்றனர்.

## வெலிகம...
(முன் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரையாளர் ஒருவர் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டமை அவர் மீது சுமர்த்தப்பட்டுள்ள குற்றச்சாட்டையடுத்து இக்கல்லூரி மூடப்பட்டது. இது தொடர்பாக கல்லூரி அதிபர் மௌலவி அப்துர்ரஹ்மான் தலைமையில் குழுவொன்று கடந்த வாரம் முஸ்லிம் கலாசார பணிப்பாளர் பைசல் அவர்களை சந்தித்து கலந்துரையாடியது.

வெலிகம பொலிசாரும் விசாரணைகளை மேற்கொண்டு இருந்தார்கள். தற்போது பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் விசாரணைகள் அவசியமில்லை என்றும் மேலதிக நடவடிக்கை தேவையில்லை என்றும் தெரிவித்ததையடுத்து அரபுக் கல்லூரியை திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக பணிப்பாளர் பைசல் தெரிவித்தார்.

இதையடுத்து மூடப்பட்ட வெலிகம பாறி அரபுக் கல்லூரியை இன்னும் ஒரிரு நாட்களில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் நிலையத்திற்கு தெரிவித்தார்.

மேலும் பழைய அரபுக் கல்லூரிகளில் ஒன்றான இதில் சுமார் 180 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நிகழ்நிலை...
(முன் பக்கத் தொடர்ச்சி)

அதன் தீர்ப்பை தெரிவித்திருந்தது. இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவித்த பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு முரணாகவே இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு இதில் உள்வாங்கப்பட்ட 34 சர்த்துக்களில் அரசியல் அமைப்புக்கு முரணான சர்த்துக்களை திருத்தி சாதாரண பெரும்பான்மையால் இச் சட்டம் நிறைவேற்றப்பட முடியாது என உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தது. இந்த திருத்தங்கள் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அனால் அரசு அதனை செய்யவில்லை. இச்சட்டமூலத்தினால் நாட்டுக்குள்ளும் சர்வதேச மட்டத்திலும் பல பாதகமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்றும், தெரிவித்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இச்சட்டமூலத்தினால் தேர்தல் காலங்களில் அரசுக்கு எதிராக தெரிவிக்கப்படும் கருத்துக்களை தடுப்பதே நோக்கம் என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

## குறைபாடுகள்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அனைத்து சட்டமூலங்களிலும் திருத்தங்களை உள்ளடக்கிய பின்னர் அவை உரிய வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து ஏதேனும் குறைபாடுகள் காணப்படின், அவற்றை நிவர்த்தி செய்ய சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்திய பின்னர் பாராளுமன்ற அதிகாரிகள் குழுவினால் அதனை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறைகளின் பின்னர் தம்மிடம் சமர்பிக்கப்படும் சட்டமூலத்தில் கையொப்பமிட்டு சான்றுப்படுத்துவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பேரீச்சம்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டும் இதே தொகையே இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

பேரிச்சம் பழங்கள் இறக்குமதி செய்வதற்காக விதிக்கப்படுகின்ற வரிச்சலுகையும் வழங்குமாறு முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் கலாசார சமய விவகார பௌத்த விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மூலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்த கோரிக்கைக்கு இன்னுமொரு சில தினங்களில் பதில் கிடைக்கும் என பணிப்பாளர் பைசல் தெரிவித்தார்.




SAFEWAY
TRAVELS & TOURS
Organizing Hajj, Umrah Pilgrimage & Airline Ticketing
Leaving 28th May
Returning 22nd June
Staying at Clock Towers Hotel
Staying 5 days in Madina
191/20-1, Siebel Garden,
High Level Road, Kirulapana,
Colombo – 05, Sri Lanka.
E-mail: Safewayfarook1@gmail.com
Web: www.sfewaytravelssandtours.com
hotline : +94 11 2513227
: +94 11 2513226
: +94 11 2513373
Insta: Umarahwithsafeway
FB: Safeway Travels & Tours
Res: 191/20, Highlevel Road, Kirulappana, Colombo 06.


INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
Counseling & Psychology
Teacher Training
Business Management
Spoken English
AMI Montessori
Child Psychology
IT Programs
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907
Awarded By:
INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
HND (UK) in Business Management
HND (UK) in Computing
HND (UK) in Teacher Training
HND (UK) in Psychology
HND (UK) in English
CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
Bachelors in Psychology
Bachelor of Education
BBA / MBA
BA in English
BSC IT
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032


AMAZON COLLEGE
Where Success Begins
AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk


Sapumal®
Since 1977
Black Ires
PREMIUM INCENSE STICKS
VIVID PREMIUM INCENSE STICKS
Arizona
VIVID
SAPUMAL
SAPUMAL INDUSTRIES (PVT) LTD.
P.O. Box - 20, Mawanella, Sri Lanka. +94 35 2246642 / 2246501 Hotline: +94717 333 444
www.sapumal.com info@sapumal.com /sapumalsrilanka
ISO 9001:2015 ISO 14001:2015 CERTIFIED COMPANY
Incense Sticks | Incense Powder | Wax Matches | Candles | Air Fresheners | Roll-On Perfumes


THE GLOBAL TRAVELS & LEISURE (PVT) LTD
THE GLOBAL TRAVELS & LEISURE
IATA Accredited Agent
Guided by
As Sheikh Shuhaib Dheeni
HAJJ 2024 PACKAGES
GOLD
• Return Air Ticket.
• Hajj Visa
• Makkah Clock Tower 5 Starr Hotel (0 M)
• Madeena 4 Star Hotel (50 M)
• Delicious Food 3 Time Breakfast, Lunch, Dinner.
• Complete Luxury Round Trip Transport.
• Mina Tent B
• Local Madina and Makkah Ziyarats with Guide.
LKR 2,150,000/-
SILVER
• Return Air Ticket.
• Hajj Visa
• Makkah Clock Tower 5 Star Hotel (0 M)
• Madeena 4 star Hotel (50 M)
• Delicious Food 3 Time Breakfast, Lunch, Dinner.
• Complete Luxury Round Trip Transport.
• Mina Tent C
• Local Madina and Makkah Ziyarats with Guide.
LKR 1,850,000/-
Al Hajj Askar Aunn
0777 031 523
Al Hajj Z A Aunn
0775 542 660
0117 221720 info@theglobal.lk WWW.THEGLOBAL.LK NO 853 MARADANA COLOMBO 10 (NEXT TO SAMAPTH BANK)

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2024 JANUARY 28 - SUNDAY

WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலம் கருத்து சுதந்திரத்தை பாதிக்குமா?

சமூக ஊடகங்களின் செயற்பாடுகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வகையிலான ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலமான "ஒன்லைன் சேப்டி பில்" 2024.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திப் போடுவதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட கடைசியான சட்டமூலம் இதுவாகும். ஏற்கனவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை நிறைவேற்ற முற்பட்ட போது இந்த சட்டமூலத்தை சமர்ப்பித்து நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டதற்கு எதிராக பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியில் இருந்தும் கிளம்பிய எதிர்ப்பு காரணமாக அந்த சட்டமூலம் திருத்தத்திற்கு உட்படுத்தப்படும் என்று அறிந்த அரசாங்கம் சற்று பின்வாங்கியது. அதன் பின்னர் ஒன்லைன் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 28 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. பின்னர் சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 57 பிரிவுகளில் 34 பிரிவுகளை திருத்தம் செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அவ்வாறு இல்லாமல் சட்டமூலத்தை நிறைவேற்றுவதாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும் என்பது உயர் நீதிமன்றத்தின் உத்தரவாக இருந்தது.

எவ்வாறாயினும் உயர் நீதிமன்றத்தின் அறிவுரைக்கமைவாக சில திருத்தங்களை முன்வைத்து இந்த சட்ட மூலத்தை கடந்த 24 ஆம் திகதி இரண்டு நாள் விவாதத்தின் முடிவில் 46 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்திற்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் கிடைத்தன. இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களைப் போன்று ஆளும் கட்சிக்கு ஆதரவான எல்லா உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி தரப்பை சேர்ந்த 54 உறுப்பினர்கள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் சபையில் இருக்கவில்லை. இவர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரும் உள்ளடங்குகின்றனர்.

எதுவானாலும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதனால் அடுத்து சபாநாயகரின் கையொப்பத்துடன் சட்டமாகலாம். ஆனாலும் எதிர்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் இந்த சட்டமூலத்திற்கு சபாநாயகர் கையொப்பமிடக் கூடாது என்று வலியுறுத்தி வருகின்றனர். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் திருமதி ஜூலி சங் கூட இந்த சட்டம் ஆபத்தானது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி உட்பட மாற்றுக் கருத்துக்களை கொண்ட அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்களாக 52 அமைப்புக்கள் அவற்றின் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. சட்டமூலம் விவாதிக்கப்பட்ட இரண்டு தினங்களிலும் பாராளுமன்ற நுழைவு பிரதேசம், கொழும்பு கோட்டை உட்பட நாட்டில் பல பகுதிகளில் எதிர்ப்பு பேரணிகளும் இடம்பெற்றன. ஆனாலும் அரசாங்கம் நினைத்ததை செய்துவிட்டது.

குறிப்பாக அரசாங்கம் சொல்கின்ற நியாய தர்மத்தின் படி இந்த சட்டமானது நாட்டு மக்களை பாதுகாப்பதற்கே கொண்டுவரப்பட்டது என அரசாங்கம் கூறுகின்றது. ஆனாலும் சட்டத்திற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் தரப்பினரின் பார்வையில் இவ்வாறான ஒரு சட்டத்தை அரசாங்கம் மிக விரைவாக நிறைவேற்ற முயற்சி எடுத்திருப்பது அரசையும் ஆட்சியாளர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக சமூக ஊடகங்கள் மூலம் சுதந்திரமாக வெளிப்படுத்தப்படுகின்ற பேச்சு, எழுத்து மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்காகவே என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது. தற்போதைய 09 ஆவது பாராளுமன்றத்தின் 04 ஆவது கூட்டத் தொடர் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் 26 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு ஒத்திவைக்கப்படும் 09 ஆவது பாராளுமன்றத்தின் 05 ஆவது கூட்டத்தொடர் 2024 பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரையுடன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றது. அவ்வாறு கூட்டத்தொடர் ஒன்று முடிவுக்கு கொண்டு வரப்பட்டால் முன்னைய கூட்டத்தொடரின் போது ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமல் எஞ்சி இருக்கின்ற பிரேரணைகள் காலாவதியாகி மீண்டும் புதிதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள் கூறுகின்றன. அதனால் இந்த சட்டமூலத்தை பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னதாக இரவோடிரவாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருந்தது என்றே கூறலாம்.

இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சில விடயங்கள் இந்நாட்டில் மக்கள் அனுபவித்து வருகின்ற அடிப்படை உரிமையான பேச்சு, எழுத்து மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை பாதிப்பதாகவும் சுதந்திரமாக கூட்டம் கூடும் உரிமை, எதிர்ப்பை வெளிப்படுத்தும் சுதந்திரம் உட்பட பல விடயங்களுக்கு தடைவிதிப்பதாக அது தொடர்பான வல்லுனர்களாலும் அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகளாலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு வராமல் தடுப்பதற்காக பல அமைப்புக்கள் உயர் நீதிமன்றத்தில் மனுக்களை சமர்ப்பித்திருந்தாலும் திருத்தத்துடன் நிறைவேற்றலாம் என்ற உயர் நீதிமன்ற உத்தரவுக்கமைய இப்போது சட்டமாகி இருக்கின்றது. சட்டமூலத்தின் ஏற்பாட்டின்படி 05 பேர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட போது ஜனாதிபதியின் பிரதிநிதி அவசியமற்றது என்ற திருத்தத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்வைக்க முயற்சி எடுத்ததாயினும் அந்த திருத்தத்தை ஆளும் கட்சி நிராகரித்துவிட்டது. அதனால் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படுகின்ற முறையானது ஜனநாயக மரபுகளுக்கும் உயர் நீதிமன்ற அறிவுரைக்கும் விரோதமானது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன், ரவுப் ஹக்கீம் உட்பட பல உறுப்பினர்கள் கடுமையாக அரசாங்கம் மீது அதிருப்தியை வெளியிட்டனர்.

அந்த ஆணைக்குழு இவ்வாறு சமூக ஊடகங்கள் வெளிப்படுத்திய அல்லது பரப்பிய தகவல் பிழையானது, ஆதாரமற்றவை, உண்மைக்கு புறம்பானது என்று கண்டறிந்தால் குறித்த சட்டத்தின் அடிப்படையில் 05 இலட்சம் ரூபா முதல் 10 இலட்சம் ரூபா வரையில் அபராதம் மற்றும் 05 வருட சிறைத்த தண்டனை என்றெல்லாம் இருப்பதாக புதிதாக வெளியிடப்பட்டுள்ள அரசாங்க வர்த்தமாணி அறிவித்தலை அடிப்படையாக வைத்து அச்சம் தெரிவிக்கப்பட்டிருகின்றது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்தல், மற்றும் எதிர்த்தல், நாட்டிற்கு பாதகமான உடன்படிக்கைகள், திட்டங்கள் பற்றி வெளிப்படுத்தல் போன்ற விடயங்களை வெளிப்படுத்தும் போது அதற்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டால் குறித்த சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படுகின்ற ஆணைக்குழு அவை தவறென்று கண்டால் அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க இயலுமாகின்றது.

அண்மையில் நாரம்மலையில் பொலீஸ் அதிகாரி ஒருவரால் நபர் ஒருவர் அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்ட தகவல் சமூக ஊடகம் இல்லாதிருந்தால் மறைக்கப்பட்ட உண்மையாகி இருக்கலாம் அதே போன்று காலாவதியான மருந்து வகை இறக்குமதி, சுகாதாரத்துறையில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் பற்றிய தகவல்கள் சமூக ஊடகங்களால் வெளிப்படுத்தப்படாமல் இருந்திருந்தால் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இன்னும் அதே பதவியில் இருந்திருப்பார். இது போன்ற அரசுக்கு தலைவலியை ஏற்படுத்தி நெருக்கடியை ஏற்படுத்தும் விடயங்களை கட்டுப்படுத்தி சமூக ஊடகங்களில் குரல்வலையை நசுக்க முயற்சி எடுக்கும் அபாய நிலை எதிர்காலத்தில் இடம்பெறலாம். அப்போது அடிப்படை உரிமையான பேச்சு, எழுத்து மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மக்கள் அனுபவித்தல் மற்றும் தகவல் அறிவதற்கான சுதந்திரம் என்பவற்றிற்கு பாதகமான நிலைமைகள் ஏற்படலாம். அவை பயங்கரவாத நடத்தையாகவும் அர்த்தம் கற்பிக்கப்படலாம்.

அதனால் இனிமேல் சமூக ஊடகங்களான பேஸ் புக், டுவிட்டர், வட்ஸ்அப் போன்றவற்றை உள்ளடக்கிய இணைய வழி தொடர்பாடலை பயன்படுத்தக்கூடியவர்கள் சட்டத்தின் ஆழம் அறிந்து மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். சமூக ஊடகங்கள் இருப்பதால் இன்று அரசாங்கம் மறைக்க முயற்சி செய்கின்ற அல்லது மக்கள் அறியக் கூடாது என்று கருதும் பல விடயங்கள் கட்டுப்பாடுகள் இன்றி வெளிப்படுத்தப்படுவதால் மக்களால் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

ஊடக சுதந்திரம் என்பது ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து அரசாங்கமோ அதிகாரிகளோ அல்லது புலனாய்வுத் துறையோ ஏன் வெளிப்படுத்தியது? யாரால் தகவல் வழங்கப்பட்டது? என்ற கேள்வி எழுப்பாமல் இருக்கின்ற நிலையும் அரசாங்கம் மறைக்க முயற்சி செய்கின்ற தகவல்களை மக்கள் அறியச் செய்வதுமாகும். ஆனால் அத்தகைய ஒரு நிலை பூரணமாக இலங்கையில் இல்லை என்றே கூற முடிகின்றது.

# ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சிக்குள் சுழியோடும் ஸ்ரீதரன்..!



சுஐப் எம்.காசிம்



தமிழர்களின் தாயகத்தாகம் தணியவில்லை என்பது தமிழரசுக் கட்சி புதிய தலைவரின் தெரிவில் தென்படுகிறது. கடும்போக்கின் பிடிக்குள் தென்னிலங்கையும் தாயகப்பிடிப்பில் வடக்கும் உள்ளவரைக்கும் சவால்கள் தவிர்க்க முடியாதவை. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக ஸ்ரீதரன் பதவியேற்ற சூட்டோடு, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் சந்திப்பு நடத்திய தமிழ் எம். பிக்கள் வடக்கு, கிழக்குக்கு மட்டுமாவது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளனர். இம்மாகாணங்கள் இயங்காதிருப்பது இலங்கை தமிழர்கள் மீதான இந்தியாவின் அக்கறையை அலட்சியம் செய்வதாக அர்த்தப்படுமென இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய, இலங்கை ஒப்பந்தம் உருவாக்கிய மாகாணசபை முறைகளில் பிரிவினைத்தோற்றம் இருப்பதைத் தவிர்ப்பதற்கு ஒற்றையாட்சியை விரும்பும் சிங்கள தலைவர்கள் கவனமாகச் செயற்படுகின்றனர். இதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்தன அன்று பயன்படுத்திய அதேபாணியிலான யுக்திகளை காலமாற்றத்துக்கேற்ப இன்றைய ஆட்சியாளர்கள் கையாள்கின்றனர். இதை அவதானித்து வந்த தமிழ் தேசியம், சமயோசித சிந்தனைக்கு வழிவிட்டுள்ளது. இதற்காகவே, தமிழர்களின் தாயகப் பிரதேசங்களிலாவது மாகாண சபைகளைக் கோரியுள்ளனர். இந்திய தலையீட்டில் உருவான மாகாண சபைகளுக்கு இந்திய நிதியுதவியிலாவது தேர்தல் நடத்தப்படுவதுதான் இவர்களின் விருப்பம். இவ்வாறு நடந்து இவ்விரு மாகாண சபைகளும் இயங்கினால் தமிழர்களின் தனித்துவம் தென்படுமென இவர்கள் கருதுகின்றனர்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குள் அரசியல் அபிலாஷைகளை அடைய முனையும் தமிழ் தேசியத்தின் செயற்பாடுகள் பிழை என்பதற்கில்லை. ஆயுதப் போராட்டத்தால் அடைய முடியாமலான தமிழர்களின் இலட்சியங்கள் எந்த வடிவிலாவது பெறப்படும் என்பதே இவர்களின் நகர்வு. ராஜபக்ஷக்களின் விவாதமும் இதுதான். ஆயுதப்போராட்டம் மௌனித்தாலும் தமிழர்களின் ஏனைய இயங்குதளங்கள் விழிப்பாக உள்ளதாகவே தென்னிலங்கையை இவர்கள் விழிப்பூட்டுகின்றனர். புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் அடைந்து வரும் செல்வாக்குகள் மற்றும் இந்திய தொப்புள்கொடி உறவுகள் எல்லாம் இலங்கை ஒற்றையாட்சிக்கு சவாலானவையே!

கனடாவில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இலங்கைத் தமிழர்களுக்கான உதவிகள் தொடருமென்கிறார். 1983இல்,1800 இலங்கைத் தமிழர்களுக்கு அடைக்கலம் வழங்கிய கனடா, அன்றிலிருந்து இலங்கையின் போக்கை அவதானிப்பதாக எச்சரிக்கும் பாணியில் உரையாற்றினார். தென்னிலங்கையில் வீழ்ந்தோருக்கு கனேடியப் பிரதமரின் உரை ஊன்றுகோலாக அமையலாம்.

அவசரமாகக் கூடிய ராஜபக்ஷக்களின் உயர்மட்டக் குழுவினர் இன்றைய நிலையில், ரணிலை ஜனாதிபதியாக்குவது பொருத்தம்தானா? எனவும் அங்கலாய்த்துள்ளனர். பொருளாதார மீட்சிக்காக ஐரோப்பாவையும் சர்வதேச நாணய நிதியத்தையும் நம்பியுள்ள ரணிலைச் சுற்றிவளைக்கவே தமிழரசுக் கட்சிக்கு கடும்போக்குள்ள தலைவர் தெரிவாகியுள்ளார். தென்னிலங்கை பின்புலமுள்ள சுமந்திரனை தலைவராக்கி எதையும் சாதிக்க இயலாதென புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் செயலாற்றி உள்ளன. இதனால்தான், தலைவராகத் தேர்வானவுடனேயே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்குச் சென்று தமிழுணர்வை உயிரூட்டியிருக்கிறார் ஸ்ரீதரன்.

இலங்கை தமிழரசுக் கட்சி புதிய தலைவரின் தெரிவு, தென்னிலங்கை கடும்போக்குகளை உசுப்பேற்றாமலிருப்பதே தமிழ் தேசியத்துக்குள்ள தற்காலிக பாதுகாப்பு. இதை உணரும் வகையிலான செயற்பாடுகளை புதிய தலைமை முன்னெடுக்குமா? வென்றெடுக்க வேண்டிய உரிமைகளில், முஸ்லிம்களுக்கும் சில தனித்துவம் உள்ளதென்ற உணர்வில் இப்புதிய தலைமை பயணிக்குமா? இக்கேள்விகளிலுள்ள பதில்களே இவருக்கான பிரதான சவால்களாகப்போகின்றன.

முஸ்லிம் தலைமைகளுடன் சகவாசமாகப் பழகுவதால் மாத்திரம் இணைந்த அல்லது இயைந்த பயணத்தில் சக சிறுபான்மை சமூகத்தை ஒற்றுமைப்படுத்த முடியாது. எழுபது வருட பாரம்பரியமுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் நகர்த்திய காய் நகர்த்தல்களைப் போன்ற கச்சித பயணத்துக்கு ஸ்ரீதரனும் தயாராவது அவசியம். பிரித்தாளும் தந்திரங்களுக்குள் சிறுபான்மைச் சமூகங்களை மோதவிடும் ஒற்றையாட்சி விரும்பிகளுக்கு இதுவே பாடமாக அமையும்.

நடைபெறலாமென நம்பப்படும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் தேசியத்தின் முடிவுகள் சுயமாக இருக்காது. இந்தியாவின் விருப்பிலான முடிவுகளுக்கு இணங்குவதானால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காவது தேர்தல் நடத்தப்படுவதை இந்தியா உத்தரவாதமாக வழங்க வேண்டுமென தமிழரசுக் கட்சியின் புதிய தலைமை கோரலாம்.

# சீனன்கோட்டை அல் ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் பரிசளிப்பு விழா

பேருவளை சீனன்கோட்டை அல் ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் 2024ம் ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதியும், ஆண்டிறுதிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கும், மற்றும் வழீபா யாக்கூத்தியா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு வைபவமும், பெற்றோர் ஒன்று கூடலும் கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் நடைபெற்றது.

கலாபீட பணிப்பாளர் மௌலவி எம்.ஜே. எம். பஸ்லான் அஷ்ரபி – பீ ஏ அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாபீட அதிபர் மௌலவி அஸ்மிகான் (முஅய்யிதி) வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ் வைபவத்தில் சங்கைகுரிய அஷ்ஷைக் ஸகி அஹ்மத் (எம் ஏ) பின் அஷ்ஷைக் காலிப் அலவி ஹாஜியார் அலவிய்யதுல் காதிரி விசேட அதிதியாக கலந்து கொண்டார்கள்.

கலாபீட போதனாசிரியர்களான மௌலவி முஹம்மத் ஹாதிக் (பஹ்ஜி), மௌலவி முஹம்மத் (முஸ்தபவி), மௌலவி அகீல் (ஹஸனிய்யுல் காதிரி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

கலாபீட இணைப் பொருளாலர்களான அல் ஹாஜ் முஸ்னி உவைஸ், அல் ஹாஜ் மிஸ்ராஜ் மதீன், உறுப்பினர்களான அல்ஹாஜ் பீ எம் முக்தார், அல்ஹாஜ் ரியாஸ் பாஸி , எம் ஆர் ஷாஜஹான் மற்றும் சீனன் கோட்டை வாலிபர் ஹழரா ஜமாத் உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள். பாஸிய்யா ஜ/ம்ஆ பள்ளிவாயல் இமாம் மௌலவி அஹ்மத் முபாரக் (மன்பயீ) அவர்களும் இன்னும் பல உலமாக்களும் கலந்துகொண்டார்கள். கலாபீட மாணவர்களது பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உரையாற்றிய கலாபீட பணிப்பாளர் மௌலவி பஸ்லான் (அஷ்ரபி) ஸாலிஹான நல்லொழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் முக்கியத்துவம் பற்றி தெளிவுபடுத்தினார். ஒருவர் மரணித்தால் மூன்று விடயங்களைத் தவிர அவருடைய அனைத்து அமல்களும் தடைப்பட்டுவிடும். நிலையான தர்மம், பயனுள்ள அறிவு, பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை ஆகிய மூன்று விடயங்களே தொடர்ந்து பயனளிக்கக் கூடியதாகும். இதிலே ”ஸாலிஹான பிள்ளை” என்பது தத்தமது சொந்த பிள்ளைகளாக மாத்திரம் இருக்க வேண்டும் என சிலர் கருதுகிறார்கள். ஹதீஸ ின் வாசகத்தில் அவ்வாறான சொற்றொடர் இடம்பெறவில்லை. மாறாக ”ஸாலிஹான பிள்ளை” என பொதுப்படையாகவே கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் அரபுக் கல்லூரி மாணவர்களை ஸாலிஹான பிரார்த்திக்கும் பிள்ளைகளாக நாம் உருவாக்குவதினால் அவர்களும் எமக்கு பிரார்த்திப்பதால் அது எமக்கு நிச்சயம் பயனளிக்கும் என தெளிவுபடுத்தினார்.

இங்கு உரையாற்றிய அலவிய்யத்துல் காதிரிய்யா தரீக்காவின் ஷைக் மௌலவி ஸக்கி அஹ்மத் கூறியதாவது:

உலகக் கல்வி மார்க்க கல்வி என இரு துறைகளையும் இணைத்து படயணிக்கும் போதே சீரான எதிர்கால தலைவர்களை உருவாக்க முடியும் என்பதை விரிவாக தெளிவுப்படுத்தினார். இதன்போது ”கலிமா தையிபா” என்ற பாடத்திட்ட புத்தகங்களும் கலாபீடத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இங்கு உரையாற்றிய கலாபீட அதிபர் மௌலவி அஸ்மிகான் (முஅய்யிதி) மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பெற்றோரின் பங்களிப்பு அவசியம் என்ற கருப்பொருளில் உரையாற்றினார். கல்லூரி நிர்வாகமும் ஆசிரியர்களும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு முடியுமான அளவு பங்களிப்பு செய்யும்போது பெற்றோர்களும் அதற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை கண்காணிக்க வேண்டும்,அதிக விடுமுறை எடுக்கக் கூடாது, விடுமுறைகளில் மாணவர்களை நல்ல முறையில் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வு நிர்வாக சபை தலைவர் அல்ஹாஜ் சட்டத்தரணி எம் சி எம் ஹம்சா அவர்களதும், நிர்வாக சபையினதும் பூரண வழிகாட்டலிலும் அனுசரணையிலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இதை சிறப்பாக நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**(பேருவளை பீ.எம். முக்தார்)**























# “அறிவிப்புக் கலை, பீ.எச். அப்துல் ஹமீத் உடன் ஓர் உரையாடல்”



(பேருவளை பீ.எம் முக்தார்)

பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியம் தனது மூன்றாவது அமர்வாக ஏற்பாடு செய்த “அறிவிப்புக் கலை, பீ.எச். அப்துல் ஹமீத் அவர்களுடன் ஓர் உரையாடல்” நிகழ்வு நேற்று 25ஆம் திகதி மிகவும் சிறப்பாக தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஒன்றியத்தின் ஆலோசகர்களுள் ஒருவரான பன்னூலாசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றதுடன் சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீத் கலந்து சிறப்பித்தார்.

பின் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவன் எம். எச். எம். ஜரீரின் கிராஅத்துடன் வைபவம் ஆரம்பமானது. ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களின் தலைமை உரையைத் தொடர்ந்து ஒன்றியத்தின் தலைவர் றபீஸ் ஹம்ஸாவின் அறிமுக உரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றிய நிர்வாக உறுப்பினர்களால் அதிதி பீ.எச் அப்துல் ஹமீத் அவர்களுக்கு சினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

அதனையடுத்து பீ. எச். அப்துல் ஹமீத் அவர்களின் உரை இடம்பெற்றது. சுமார் ஒரு மணித்தியாலம் வரை உரையாற்றிய அவர் தமிழ் மொழி மற்றும் அறிவிப்புத்துறை சார்ந்த பல பயனுள்ள தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்.

தொடர்ந்து அல் ஹம்றா மகா வித்தியாலய அதிபர், உப அதிபர், பிரதி அதிபர், சிரேஷ்ட ஆசிரியர்களினால் பீ. எச். அப்துல் ஹமீத் அவர்களுக்கு விஷேட நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்பட்டது. பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடல் நேரத்தில் சபையோர் பலர் கேட்ட கேள்விகளுக்கு பீ. எச். அப்துல் ஹமீத் பதில்களை வழங்கினார்.

நிகழ்வின் இறுதிப் பகுதியில் பீ.எச். அப்துல் ஹமீத் அவர்கள் எழுதிய ”வானலைகளில் ஒரு வழிப்போக்கன்” நூல் பேருவளைப் பிராந்திய பாடசாலைகளின் நூலகங்களுக்கு அப்துல் ஹமீத் அவர்களால் வழங்கப்பட்டது. இறுதியாக பஸ்லி ஹமீத் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் பேருவளை பிராந்திய எழுத்தாளர் ஒன்றிய தலைவர் ரபீஸ் ஹம்ஸா உட்பட உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கரைஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவன் மொஹமட் சபீக் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

# சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியிலும் யுக்திய நடவடிக்கை தொடரும்

## அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை

யுக்திய நடவடிக்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் இருந்த போதிலும், அது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வலியுறுத்தினார்.

நீர்கொழும்பு பிரதேச சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பொது பாதுகாப்பு அமைச்சர்,

“சீருடையுடன் இருக்கும் போது யாரேனும் தாக்கினால் திருப்பி அடிக்க வேண்டும், இல்லையேல் சீருடை அணிவதில் பயனில்லை, கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும், ஜனாதிபதி எனக்கு பலத்தை வழங்கியதால் தான் இதனை கூறுகின்றேன்.

யுக்தியை துவக்கி, நாட்டை சுத்தம் செய்ய நினைத்தேன். சில யூடியூபர்கள் போதைப்பொருள் மோசடியாளர்களின் பணத்தில் வாழ்கின்றனர். அவர்களை பயன்படுத்தி எம்மை விமர்சிக்கின்றனர். யுக்திய நடவடிக்கையை நிறுத்துங்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையும் கூறியது, எங்கள் நாட்டில், நாங்கள் விரும்பியபடி செயல்படுகிறோம், சர்வதேசத்தின் விருப்பப்படி நான் செயல்படவில்லை.”

“பாதாள உலக குழு வழக்குகளில் வாதாடும் சட்டத்தரணிகளும் இருக்கிறார்கள்.பாதாள உலக குழுவினர் மில்லியன் கணக்கில் பணம் ஈட்டுகின்றனர். பாதாள உலக குழுக்களும், போதைப்பொருள் வியாபாரிகளையும் வைத்திருக்க முடியாது. அவர்கள் இந்த நாட்டிற்கு ஒரு சுமை ” என்றார்.

# ஐ.எம்.ஏ.வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான கராத்தே பயிற்சியும், தரப்படுத்தல் பரீட்சையும்






(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

ஐ.எம்.ஏ.வவுனியா மாவட்ட மாணவர்களுக்காக Kihon, Kata, Kumite ஆகிய நிகழ்ச்சிகளைக்கொண்ட கராத்தே முழுநாள் பயிற்சியும், தரப்படுத்தல் பரீட்சையும் (Grading Test) அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கராத்தே தோ சம்மேளன தலைவரும், தென்கிழக்கு பல்கலைக்கழக கராத்தே போதனாசிரியருமான முஹம்மது இக்பால் பிரதம வளவாளராக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கராத்தே ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





கிண்ணியா றஹ்மானியா பாலர் பாடசாலையின் ஆண்டு விழா சனிக்கிழமை (27) நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் கலந்துகொண்டார். மேலும் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, சூராசபைத் தலைவர் பரீத் மற்றும் நலன்விரும்பிகள் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.



**திருமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளராக அண்மையில் (22) மௌலவி சாகுல் ஹமீட் தஸ்ரிக் (JP) அவர்கள் நியமிக்கப் பட்டார்.**

(எஸ்.ஏ.பறூஸ்)









# இந்தியாவில் ராமர் கோயில் திறப்பு விழா சொல்லும் வரலாற்று செய்தி என்ன?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இந்தியா என்கிற மதச்சார்பற்ற தேசத்தில் தான் முஸ்லிம்களின் இறை இல்லம் (மஸ்ஜித்) தகர்த்து எரியப்பட்டு இந்து பிராமணர் வழிபாடு செய்யும் ராமர் கோயில் ஆக உருமாற்றம் செய்யப்பட்டுள்ளது. உலகில் வாழும் பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் வாழும் முஸ்லிம்களை உண்மையில் இந்த நிகழ்வு மிகுந்த வேதனையை அடைய செய்துள்ளது என்பதே உண்மையாகும். இந்தியாவில் வாழும் எந்த முஸ்லிமுக்கும் இந்துக்கள் வழிபடும் இராமர் கோயில் கட்டுவதை குறித்து சிறிதும் வருத்தம் கிடையாது. ஆனால், தாங்கள் வணங்கி வழிபடும் பள்ளிவாசலை தகர்த்து எறிந்து விட்டு இங்கு தான் இராமர் பிறந்தார் என்று சொந்தம் கொண்டாடி கோயில் கட்டுவதை மனித சமூகத்தின் நாகரீகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்படும் எந்தவொரு அறிவுடைமை சமூகமும் ஏற்றுக் கொள்ள முன் வராது என்பதே உண்மையாகும். இது போன்ற காட்டு மிராண்டிதனமான நடவடிக்கைகளை இந்தியாவில் வாழும் இந்து சமூகத்தில் பெரும்பாலான மக்களும், திராவிட சிந்தனைவாதிகளும் , இடதுசாரி அரசியல் தலைவர்களும் தங்களின் பெருத்த கண்டனத்தை தெரிவித்துக் வந்த போதிலும் இந்து சனாதன மூர்க்கத்தனமான கடும்போக்கு தீவிரவாதிகள் தங்கள் இலட்சியத்தை முழுமையாக நிறைவேற்றி கொண்டார்கள் என்பதே உண்மை.

இது முற்றிலும் அரசியல் சார்ந்த வெறுப்பின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நடவடிக்கை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதில் கோயில் கட்டி கொள்ள அனுமதி அளித்த உச்சநீதிமன்றம் வழிமொழிந்த தீர்ப்பில் கூட எந்த விதத்திலும் ஆதாரங்கள் இருப்பதாக கூறவில்லை. இரண்டு தரப்பிலும் சொந்தம் கொண்டாடி வரும் சர்ச்சைக்குரிய இடத்தில் கோயில் கட்டி கொள்ளுங்கள் என்று இந்திய உச்சநீதிமன்றம் கட்டப்பஞ்சாயத்து தீர்ப்பை வழங்கி ஒட்டு மொத்த உலகத்தையும் அதிர்ச்சி அடையச் செய்து விட்டது என்பதே யதார்த்தமான உண்மையாகும். இந்த தகர்ப்பு சம்பவத்திற்கு பின் இந்தியாவில் நடைபெற்ற கலவரங்களில் பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்தியாவின் மாற்ற முடியாத கருப்பு வரலாறு என்பதையும், இந்த கறுப்பு வரலாற்றை எந்தவொரு காலத்திலும் யாராலும் மாற்ற முடியாது என்பதை நாம் அனைவரும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பாபர் மசூதியில் காணப்பட்ட கல்வெட்டுகள் மற்றும் அரசு ஆவணங்களின்படி பார்த்தால், 1528 - 1530 காலக்கட்டத்தில் அயோத்தியில் ராம் கோட் மொகல்லாவில் மலைக்குன்றில் முகலாய சக்ரவர்த்தி பாபரின் உத்தரவின் பேரில் அவருடைய ஆளுநர் மீர் பாகி என்பவரால் இந்த மசூதி கட்டப்பட்டுள்ளது. ஆனால் பாபர் அல்லது மீர் பாகி இந்த நிலத்தை எப்படி வசப்படுத்தினார்கள் என்பது பற்றியும், மசூதி கட்டுவதற்கு முன்பு அங்கே என்ன இருந்தது என்பது பற்றியும் எந்த ஆவணங்களும் கிடையாது. அதாவது பாபர் காலத்தில் இந்த இடத்தில் இந்து கோயில் இருந்து இருந்தால் அது மிகப் பெரிய வரலாறு.ஆனால் பிந்தைய காலத்தில் யாரோ உளறிய வார்த்தைகள் தான் இந்த கொடுமைகளுக்கு காரணமாக அமைந்து விட்டது. பிற்காலத்தில் முகலாய மன்னர்கள், நவாப்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் இந்த மசூதியின் பராமரிப்புக்கு குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்துள்ளதையும் நாம் வரலாற்று நிகழ்வுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. எந்தவொரு நிலையிலும் சம காலத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள் வாயிலாக கூட இந்த இடத்தில் இராமர் பிறந்தார் என்பதற்கு எந்த ஆதாராமோ அதனைத் தொடர்ந்து கோயில் கட்டப்பட்டு வழிபாடு நடந்ததாகவோ இதுவரை எந்த பதிவும் இல்லாத நிலையில் தான் தற்போது இது போன்ற அராஜகம் இந்தியாவில் அரங்கேறி உள்ளது குறிப்பிடத்தக்கது. 1800 களில் நவாப் ஆட்சி நடந்த போது இந்து, முஸ்லிம் கலவரம் பல முறை நடந்தது. அந்த கலவரங்களின் போது முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் அவர்களின் உடல்கள் பாபர் மசூதி வளாகத்தில் கலவரக்காரர்களால் புதைக்கப்பட்டது என்று அறிய முடிகிறது. மசூதியை சுற்றியுள்ள இடம் ராமர் பிறந்த இடம் என்று இந்து சமுதாய மக்கள் கருதி, அங்கு பூஜைகள் செய்து வந்தனர் என்று, கெஜட் பதிவு செய்த பலரும், வெளிநாட்டு பயணிகள் பலர் தங்களுடைய பயணக் குறிப்புகளிலும் புத்தகங்களிலும் பதிவு செய்துள்ளனர். ஆனால் எந்த ஒரு ஆதாரமும் இதுவரை காண்பிக்கபடவில்லை என்பதே உண்மையாகும்.1857 கலகத்துக்குப் பிறகு நவாப் ஆட்சி முடிவுக்கு வந்து பிரிட்டிஷ் ஆட்சி உருவானது. பிரிட்டிஷ் நீதி நிர்வாக முறை அமலுக்கு வந்தது. அந்த காலக்கட்டத்தில் இந்துக்கள் அங்கு ஒரு பீடம் அமைத்து, பூஜைகளும், வழிபாடும் செய்து வந்தனர் என்று நம்பப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக இரு தரப்பினருக்கு இடையில் பல முறை மோதல்கள் நடந்துள்ளன.மசூதியை ஒட்டி இந்துக்கள் பீடம் அமைத்து, மசூதியின் சுவரில் ஹராம் ராம்" என்று எழுதியிருக்கிறார்கள் என்று கூறி 1858 நவம்பர் 30ஆம் தேதி, மசூதியின் நிர்வாகப் பொறுப்பில் இருந்த முகமது அஸ்கர் ரிட் மனு தாக்கல் செய்தார். இந்த நிலையில் தங்களுடைய தொழுகைக்கு இந்துக்கள் இடையூறு செய்வதாக முஸ்லிம்கள் அடிக்கடி ரிட் மனுக்கள் தாக்கல் செய்தனர்.ஆகவே தான் 1528 கட்டப்பட்ட பாபர் மசூதி இடையே எங்கும் பேசப்படாத நிலையில் 1855 தில் தான் முதன் முதலாக ராமர் கோயில் என்று பேசப்பட்டு உள்ளது. இன்றைய நமது வாழ்வில் சிலர் யதார்த்தமாக பேசும் பேச்சுக்களும் , வேண்டுமென்றே உருவாக்கி விடப்பட்ட வதந்திகளும் கூட மக்களால் நம்பப்படுகிறது. அதன் பிறகு அவை உண்மையாக சித்தரிக்கும் வேலை சமூகத்தில் நடைபெற்று வருகிறது. அது போன்ற நிகழ்வுகள் தான் பாபர் மசூதி விவகாரத்தில் நடைபெற்று உள்ளது என்பதே உண்மையாகும்.

1883 ஏப்ரல் மாதத்தில் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள பைசாபாத் நகரில் உள்ள துணை ஆணையாளரிடம் இந்து நிர்மோஹி அகாரா அமைப்பு விண்ணப்பம் கொடுத்தது. ஆனால் முஸ்லிம்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இது தான் முதல் சம்பவமாக உள்ளது. மே 1883ல் சிலர் கட்டுமானப் பொருட்களுடன் அங்கு சென்று, கோவில் கட்ட அனுமதிக்க வேண்டும் என்று கோரினார். ஆனால் அங்கிருந்து கற்களையும், கட்டுமானப் பொருட்களையும் துணை ஆணையர் அகற்றும்படி செய்தார்.இந்து அமைப்பான நிர்மோஹி அகாராவைச் சேர்ந்த மகந்த் ரகுபார் என்பவர், பீடம் அமைக்கப்பட்டுள்ள இடம் தான் ராமர் பிறந்த இடம் என்று உரிமை கோரினார். இந்திய அரசுக்கு எதிராகவும், முகமது அஸ்கருக்கு எதிராகவும் 1885 ஜனவரி 29 ஆம் தேதி சிவில் நீதிமன்றத்தில் முதலாவது மனுவைத் தாக்கல் செய்தார். 17 அடிக்கு 21 அடி அளவுள்ள பீடம் அமைந்துள்ள இடம் ராமர் பிறந்த இடம் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. கடவுளுக்கும், மத குருக்களுக்கும் வெயில், மழையில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் வகையில் அங்கு கோவில் கட்டப்பட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். இந்த நிலையில் 1949 டிசம்பர் 22 ஆம் தேதி இரவு அபய் ராம்தாஸ் மற்றும் அவருடைய சகாக்கள் சுவர் ஏறிக் குதித்து ராமர், ஜானகி, லட்சுமணன் சிலைகளை மசூதிக்குள் வைத்து, ராமர் அங்கே காட்சி தந்து தான் பிறந்த இடத்தை எடுத்துக் கொண்டார் என்று தகவலைப் பரப்பினர். அது வரை இஸ்லாமியர்கள் அங்கு தொழுகை நடத்தி வந்தனர். வழக்கம் போல இமாம் பஜர் தொழுகைக்கு சென்ற போது தான் மாவட்ட நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது.ஆனால் இந்தியாவில் உள்ள இந்து சனாதவாதிகள் தொழுகை இங்கு நடத்தப்படவில்லை என்கிற ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யை தொடர்ந்து கூறி வருகின்றனர்.இது போன்ற தவறான வதந்திகளை தவிர பாபர் மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரத்தையும் இந்திய தொல்லியல் துறையோ, இந்திய நீதித்துறையோ இதுவரை வழங்கவில்லை என்பதை நாம் புரிந்து கொண்டாலே எந்த அளவிற்கு இந்திய முஸ்லிம்களுக்கு இந்துத்துவ சித்தாந்தம் சார்ந்த அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரவர்க்கம் அநீதி இழைத்து உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இது போன்ற சூழலில் தான் அரசியல் ரீதியில் இந்துக்களை ஒன்று திரட்டுவதற்கு ஆர்.எஸ்.எஸ். சிந்திக்கத் தொடங்கியது. ஆர் எஸ் எஸ் அமைப்பு முழுமையாக மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சித்பவ பிராமணர்கள் மூலம் தான் தொடங்கப்பட்டது. இந்துக்கள் என்கிற பெயரில் கீழ் சாதி இனமாக அடையாளப்படுத்தப்பட்ட பல்வேறு சாதிகளைச் சேர்த்து கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அந்த அமைப்பு செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர் அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டம் தீட்டி கலவரங்களில் ஈடுபட்டு வந்தனர்.இதன் தொடர்ச்சியாக இந்துக்கள் புனிதமாகக் கருதும் இடங்களுடன் தொடர்புடைய மசூதிகளை இலக்கு வைத்து ஒரு இயக்கம் தொடங்குவது என்று திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் ராமர், கிருஷ்ணர், சிவ வழிபாட்டுத் தலங்களுடன் தொடர்புடைய பள்ளி வாசல்களை இலக்கு வைக்க திட்டமிடப்பட்டது. காசி, மதுரா, அயோத்தி ஆகிய இடங்களைச் சுற்றியுள்ள மசூதிகள் மீது குறி வைக்க முடிவு செய்யப்பட்டது.இந்த மூன்று இந்து வழிபாட்டுத் தலங்களையும் விடுவிப்பது என்று டெல்லியில் விக்யான் பவனில் 1984 ஏப்ரல் 7 - 8 தேதிகளில் நடைபெற்ற இந்து மத மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. உள்ளூரில் ஒப்புதல்களுடன் மசூதிகளுக்கு அருகே கோவில்கள் கட்டப்பட்ட காரணத்தால், அயோத்தி மீது கவனம் செலுத்த முடிவு எடுக்கப்பட்டது.

ராம ஜன்ம பூமி முக்தி யாக்யா கமிட்டி 1984 ஜுலை 27ல் உருவாக்கப்பட்டது. ராமர், ஜானகி சிலைகள் கூண்டுக்குள் இருப்பது போல மோட்டார் வாகன ரதம் உருவாக்கப்பட்டது. அந்த ரதம் பிகாரில் சீதாமார்ஹியில் இருந்து செப்டம்பர் 25 ஆம் தேதி புறப்பட்டது. அக்டோபர் 8 ஆம் தேதி அந்த ரதம் அயோத்தி அருகே வருவதற்குள், தங்களின் அபிமான கடவுள்கள் கூண்டுக்குள் இருப்பதைப் பார்த்து இந்து மக்களிடம் வலுவான எதிர்ப்பும் அனுதாபமும் உருவானது.

இந்த தருணத்தில் தான் முதன் முதலில் 1984 ம் ஆண்டு மத்திய பிரதேசம் மாநிலத்தில் ஆர் எஸ் எஸ் அமைப்பின் செல்ல குழந்தையான பிஜேபி (பாரதிய ஜனதா கட்சி) மத்திய பிரதேசம் மாநிலத்தில் இரண்டு நாடாளுமன்ற இடங்களில் வெற்றி பெற்று தனது கடும் போக்குவாத அரசியலை இந்தியாவில் முன்னெடுத்துச் செல்ல ஆரம்பித்தது. இந்த காலகட்டத்தில் பா ஜ க வின் தேசிய தலைவர்களாக இருந்த வாஜ்பாய் மற்றும் அத்வானி மதவாத அரசியலில் ஈடுபட்டனர். அதிலும் லால் கிருஷ்ண அத்வானி தீவிர அரசியல் மற்றும் கடும்போக்கு வாதத்தை மேற்கொண்டார். இன்று முஸ்லிம்களின் பள்ளிவாசல் தகர்த்து எரியப்பட்டு கோயில் கட்டப்பட்டு இருந்ததென்றால் அதற்கு மூல காரணம் அத்வானி தலைமையில் ஆன மதவாத கும்பல் என்றால் மிகையாகாது.

இந்த நிலையில் 1989 லோக்சபா தேர்தல் காலத்தில் பாபர் மசூதி- ராமர் கோவில் விவகாரம் மையப்பொருளானது. ராமஜன்ம பூமிக்கான இயக்கத்தை பாஜக முழுவீச்சில் இந்துக்களிடையே கொண்டு சென்றது. இதனால் இந்திய சமூக அமைப்பில் இந்துக்கள்- முஸ்லிம்களிடையே பிளவு அதிகமானது. இது இந்துக்களின் வாக்குகளை ஒருங்கிணைக்கும் பாஜகவின் முயற்சிக்கு பெரும் வெற்றியாகவும் அமைந்தது. அப்போதுதான் இந்தியாவின் பிரதான பிரச்சனைகளில் ஒன்றாக பாபர் மசூதி- ராமர் கோவில் விவகாரம் உச்சத்தை எட்டியது. 1989 லோக்சபா தேர்தலில் வி.பி. சிங். பிரதமரானார். அப்போது வி.பி.சிங் அரசுக்கு பாஜகவும் ஆதரவு தந்தது. இதில் இருந்து பாபர் மசூதி இடிப்பு வரலாற்றின் 3-வது மற்றும் இறுதி அத்தியாயம் தொடங்கிவிட்டது.

அன்றைய காலகட்டத்தில் அயோத்தி பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் வி.பி.சிங்குக்கு பாரதிய ஜனதாவின் தலைவரான அத்வானி நெருக்கடி கொடுத்தார். அதேகால கட்டத்தில் 1990-ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு கல்வி, வேலைவாய்ப்புகளில் 27மூ இடஒதுக்கீட்டை வழங்கும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை செயல்படுத்தினார் பிரதமர் வி.பி.சிங். இதை கொள்கை ரீதியாக பாஜக கடுமையாக எதிர்த்தது. நாடு முழுவதும் இடஒதுக்கீட்டுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் தூண்டிவிடப்பட்டு வன்முறை களமாக தேசம் கனன்று கொண்டிருந்தது. இந்த அக்னிச் சூழலில்தான் 1990 செப்டம்பர் 25-ல் ராமர் கோவில் இயக்கத்துக்கான ரத யாத்திரையை அத்வானி, குஜராத்தின் சோம்நாத்தில் இருந்து தொடங்கினார். அப்போது அத்வானியின் வலதுகரங்களில் ஒருவராக இருந்தவர் இன்றைய தேசத்தின் பிரதமர் நரேந்திர மோடி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் தொடர்ந்த வெறுப்பு ஆவேசத்தின் உச்சத்தை 1992-ம் ஆண்டு டிசம்பர் 6-ந் தேதி தேசம் அனுபவித்தது. அன்று பிரதமராக இருந்தவர் காங்கிரஸ் கட்சியின் நரசிம்மராவ்.அதாவது காங்கிரஸ் கட்சி தேசத்தை வழிநடத்திக் கொண்டு இருந்த கால கட்டத்தில் தான் இந்த கொடூரமான சம்பவம் திட்டமிட்டே அரங்கேற்றம் செய்யப்பட்டது. அப்போது உத்தரப்பிரதேசத்தின் மாநிலத்தில் பாஜக ஆட்சி நடைபெற்றது. அப்போது முதல்வராக இருந்தார் கல்யாண்சிங். இன்றைய பாஜகவின் முதியோர் குழுவில் இருக்கும் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி என எல்லோரும் அயோத்தியை நோக்கி கரசேவைக்கு புறப்பட்டனர். இந்த கரசேவையின் இறுதியில் பாபர் மசூதி இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. இந்தியாவில் மதச்சார்பின்மையின் ஜனநாயகத்தின் அடையாளமாக பேசப்பட்ட பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இந்த கறுப்பு அத்தியாத்தால் அடுத்தடுத்த ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களை மத மோதல்கள், தொடர் குண்டுவெடிப்புகள் காவு வாங்கின. இன்னமும் இன்னமும் இந்திய பூமி பதற்றத்தில் இருப்பதற்கு 1992 டிசம்பர் 6-ல் நிகழ்த்தப்பட்ட பாபர் மசூதி இடிப்பு எனும் ஜனநாயகப் படுகொலையே காரணம். இந்த பாபர் மசூதி இடிப்பு வழக்கில்தான் அத்வானி, உமாபாரதி, முரளிமனோகர் ஜோஷி உள்ளிட்ட 32 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். இந்த வழக்கில்தான் இன்று லக்னோ சிபிஐ சிறப்பு நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அத்வானி

நாடு முழுவதும் இந்தியாவின் பெரு தொழில் வர்த்தக நகரங்களான மும்பை, சூரத், அகமதாபாத் என்று நாடு முழுவதும் பெரும் கலவரங்கள் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களும் , இந்துக்களும் கொல்லபட்ட வரலாறு இது என்பதை நாம் கவனமாக நினைவில் எடுத்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் தான் பாஜகவின் ஆட்சி 2019 ம் ஆண்டு இரண்டாம் முறையாக இந்தியாவில் மோடி தலைமையில் பதவிக்கு வந்த நிலையில் மீண்டும் பாப்ரி மஸ்ஜித் பிரச்சினை ஃபைனல் தீர்ப்புக்கு வந்தது. . நாடே எதிர்பார்த்து காத்திருந்த இந்த தீர்ப்பை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பு வழங்கியது. இதன் தலைமை நீதிபதியாக ரஞ்சன் கோகாய் இருந்தார். அவர் வாசித்த தீர்ப்பில் பாப்ரி மஸ்ஜித் இருந்த இடத்தில் இந்து கோயில் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை என்ற போதும் ராமருக்கு கோயில் கட்டி கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கி ஒட்டு மொத்த தேசத்தையும் அதிர்ச்சி அடையச் செய்தார். அதற்கு பிறகு தீர்ப்பு வழங்கிய முறை குறித்து இந்தியாவில் மிக கடுமையான எதிர் கருத்துக்கள் எழுந்த நிலையில் அதனால் எந்த பிரயோசனமும் இல்லாமல் போனதே உண்மை. இந்த தீர்ப்பு திட்டமிட்டு வழங்கப்பட்டதாக பலரும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மோடி அரசு கனகச்சிதமாக காய்களை நகட்டி அரசியல் காய்களை நகர்த்தி வெற்றி பெற்றது. இது அணைத்தும் அதிகாரம் மற்றும் சதி செயல்கள் மூலம் தான் நடந்ததாக இந்திய முஸ்லிம்கள் கொதித்து எழ ஆரம்பித்தனர். ஆனாலும், வட இந்திய மாநிலங்களில் எந்தவொரு கலவரமும் நடைபெறவில்லை. கடந்த காலங்களில் நடந்த கலவரங்களின் மூலம் முஸ்லிம்கள் மிகவும் கடுமையான உயிரிழப்பை சந்தித்து வந்த நிலையில் இனி ஓரு முறை இது போன்ற உயிரிழப்புகளை சந்திக்க முஸ்லிம்கள் தயாராக இல்லை என்பதே இல்லை. அதேநேரத்தில் தேசம் தழுவிய முஸ்லிம் தலைவர்கள் யாரும் இல்லாததும் இந்திய அரசியலில் மிகப்பெரிய குறை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இந்த நிலையில் தான் ஏற்கனவே திட்டமிட்டபடி மோடி அரசு மற்றும் ஆர் எஸ் எஸ் அமைப்புகள் மற்றும் அதன் துணை அமைப்புகள் வேகமாக ராமர் கோயில் பணிகளை துவக்கியது. இதற்கு காரணம் 2024 இந்தாண்டு நடைபெற இருக்கும் இந்திய நாடாளுமன்ற தேர்தலில் பாஜக மீண்டும் ஒரு முறை வெற்றி பெற இந்த கோயில் விவகாரத்தை மக்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும் என்று ஆர் எஸ் எஸ் தலைமை விரும்பியது . அதன் விளைவாகவே அரை குறையாக கட்டி முடிக்கப்பட்ட நிலையில் ராமர் கோயில் பிரான் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது போன்று அரை குறையாக கட்டப்பட்ட கோயிலில் கும்பாபிஷேகம் நடத்துவது இந்து ஆகம விதிப்படி அதர்மம் என்று பிராமண சங்கராச்சாரியார்கள் மிகவும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மோடி அரசு அதனைப்பற்றி எல்லாம் எந்த விதத்திலும் கவலை பட வில்லை என்பதே உண்மையாகும். இதிலும் குறிப்பாக இது போன்ற கோயில் பிரதிஷ்டை விழாக்களில் ஆன்மீக தலைமை குருக்கள் மற்றும் சங்கராச்சாரியார்கள் மற்றுமே பங்கேற்று பூஜைகள் செய்வது தான் மரபு. ஆனால், மிகப்பெரிய விளம்பர விரும்பியாக அறியப்படும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி எல்லா இடங்களிலும் தனது முகம் தெரியும் அளவிற்கு இந்தியா முழுவதும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.இதற்கு மிக முக்கியமான காரணம் தான் மட்டுமே இந்துக்களின் காவலர் எனவும் , தனது தலைமையிலான இந்து தேசியவாத பாஜக விற்கு வாக்களிப்பதன் மூலம் இந்தியாவில் இந்து சக்திகளை வலிமை படுத்த முடியும் என்கிற செய்தியை அவர் பொது சமூகத்திற்கு கூறியுள்ளார்.இதன் மூலம் சாமானிய இந்துக்களின் உணர்வுகளை தூண்டி தனது அரசியல் ஸ்ரத்தன்மையை பலப்படுத்த திக் கொண்டார்.இதன் மூலம் இந்துக்களின் வாக்குகள் தனக்கு முழுமையாக கிடைக்கும் என்று அவர் உறுதியாக நம்புகிறார் . அதனால் தான் அவசரமாக ராமர் கோயில் பிரான் பிரதிஷ்டை என்கிற கும்பாபிஷேக விழாவை நடத்தி முடித்தார். இங்கே நாம் கவனிக்க வேண்டிய மிகவும் முக்கியமான விடயம் என்பது உலகின் மிகப்பெரிய வல்லாதிக்க சக்தியாக வரக்கூடிய அளவில் இராணுவ பலம் மற்றும் பொருளாதர வல்லமை கொண்ட தேசமாக மாறி வரும் இந்தியா மதம் சார்ந்த அரசியலை முன்னெடுத்துச் செல்வது அந்த நாட்டின் இறையாண்மை, தேச ஒற்றுமை, தேசத்தின் வளர்ச்சி இவற்றிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உண்மையில் மதவாதம் சார்ந்த இந்து சனாதன அரசியல் இந்தியாவின் சாபக்கேடாக அமைந்து விடும் என்பது தான் நடுநிலையான இந்திய பெரும் சமூகத்தின் மிகப் பெரிய கலவையாக இருக்கிறது. அதனைத் துடைத்தெறியும் பொறுப்பும், பொது உணர்வும் , விட்டு கொடுத்து அரசியல் செய்யும் மனநிலையில் எதிர் கட்சிகள் இல்லாதது மிகப்பெரிய துரதிர்ஷ்டவசமாக அமைந்து விட்டது. இதற்கு மிக முக்கியமான காரணம் காங்கிரஸ் கட்சி முழுமையாக வலுவிழந்து போனதால் தான் இது போன்ற சீரழிவுகளை நாம் காணக்கூடியதாக அமைந்துள்ளது. இன்றுவரை எதிர் கட்சிகள் ஒன்றிணைந்து அமைத்துள்ள ஐனுேஐயு கூட்டணி கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மை வெளிப்படையாக வீதிக்கு வந்து விட்டது. இந்த நிலையில் மோடி தலைமையிலான சனாதன இந்து தேசிய அரசியல் சக்திகள் மீண்டும் வலுவான நிலையை தக்கவைத்து கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகவே தென்படுவது இந்தியாவிற்கு எந்த விதத்திலும் நல்ல செய்தி இல்லை என்பதே யதார்த்தமான உண்மை நிலையாகும்.....!

# முரண்படுவோரை முடக்க அரசாங்கம் எத்தனிக்கின்றது

## பாராளுமன்றத்தில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் காட்டம்



நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் ஊடாக ஜனநாயகத்தைச் சீர்குலைத்து கருத்து முரண்படுவோரை முடக்குவதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் ,இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரத்தின் குரல் வளையை அரசாங்கம் நெரிக்க எத்தனிப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் செவ்வாய்க்கிழமை(23) அந்த சட்டமூலத்தின் மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் ஆட்சேபனைக்கு மத்தியில் கட்சித் தலைவர் கூட்டத்தில் ஆராயப்பட்டு ,பிரஸ்தாப விவாதத்தை செவ்வாய்க்கிழமையும், புதன்கிழமையும் விவாதிப்பதாக தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் விவாதம் இடம்பெற்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது,

எனக்கு முன் உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இந்த நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் மக்களை பாதுகாக்கும் சட்டம் என்று எடுத்துக்காட்ட முயற்சித்தார்.

ஆனால் எதிர்க்கட்சியின் கவனத்தை ஈர்த்துள்ள காரணங்களைப் பார்க்கும்போது அரசு தனது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகத்தான் இதனை ஒரு துரும்பு சீட்டாக பாவிக்கின்றது என்பது எங்களுக்கு தெளிவாக தெரிகின்றது. அதைத்தான் இப்பொழுது விளக்க போகின்றேன் .

குழுக்களின் பிரதி தலைவர் அவர்களே, மாயாஜாலகாரன் உங்களுக்கு ஏதாவது ஒன்றை காண்பிக்க முயலும் போது அது வெறும் தோற்றப்பாடு மட்டும் தான் என்பது உங்களுக்கு தெரியும். வித்தைக்காரன் பார்வையாளர்களுக்கு போலியான காட்சியை காட்ட எத்தனிப்பதை போன்றே அரசாங்கமும் பொதுமக்களுக்கு காட்ட எத்தனிக்கின்றது .இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் உரையாற்றும்போது இள வயது பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது பற்றியும் பெண்களின் நிர்வாண தோற்றம் காட்சிப்படுத்தப்படும் போது அவர்கள் அவமானப்படுவது பற்றியும், அவ்வாறே பலவிதங்களிலும் பொதுமக்களை பாதுகாப்பதற்கு அவசியமான சட்டம் என்றவாறு இதை எடுத்துக்காட்ட முயற்சித்தார்.

இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இந்த சபையில் இருந்து இப்பொழுது வெளியேறுகிறார். அவருக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும் நீங்கள் இள வயதினரையும் பெண்களையும் பற்றி இங்கு கதைத்த போதிலும் ,உங்களுக்கு தெரியுமா இந்த சட்டமூலத்தில் அடங்கியுள்ள 57 பிரிவுகளில் இரண்டு பிரிவுகளில் மட்டும் தான் இளம் வயதினரையும் பெண்களையும் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

ஏனைய அனைத்தும் இணையத்தளத்தை எவ்வாறு கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதை பற்றி தான் உள்ளன .இணையத்தின் ஊடாக தகவல்களை பரிமாறும் போது அவமானத்துக்குரிய வகையில் அரசியல் ரீதியாக தங்களால் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு விமர்சனங்கள் எழும்போது அவற்றை கட்டுப்படுத்துவதற்காக தான் இந்த முயற்சி என்பது திட்டவட்டமாக தெரிகின்றது.

இது பற்றி உயர்நீதிமன்றத்தில் நீண்ட விவாதம் இடம்பெற்றது. இந்த சட்ட மூலம் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா என்பதை பற்றி பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட போது சட்டமா அதிபர் முரணான 31 பிரிவுகளையும் பற்றி விளக்கமளிப்பதற்கு மூன்று மணித்தியாலங்களை செலவிட்டிருக்கிறார் . இந்த சட்டமூலம் அரசியலமைப்போடு இணங்கி செல்லாத நிலையில் அதனை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சட்டமா அதிபர் எவ்வாறு அத்தாட்சி படுத்தினார் என்பது புதிராக இருக்கிறது. 57 பிரிவுகளில் 31 பிரிவுகள் அரசியலமைப்ப முரணாக இருந்த போது அதனை தெரிந்து கொண்டே அவர் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

இதை நாங்கள் மிக கவனமாக நோக்க வேண்டும். இந்த நாட்டின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தில் எஞ்சியுள்ள சில காப்பீடுகளையும் கூட அகற்றுவதற்கு இந்த சட்டத்தின் ஊடாக அரசாங்கம் எத்தனிக்கின்றது அத்துடன் இந்த நாட்டில் ஜனநாயகத்தை அழித் தொழிக்கப் போகின்றது .மக்களின் விமர்சனத்திற்கு அஞ்சி அரசாங்கம் மக்களை விட்டும் விரண்டோடுகின்றது. அந்த விமர்சனங்களை கட்டுப்படுத்துவதற்காகவே இப்பொழுது இந்த சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது. கடுமையான தண்டனைகள் விதிக்கப்படப் போகின்றன மக்களை நசுக்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்படப் போகிறது. நிறைவேற்று அதிகாரம் அதனது நிலைப்பாட்டை திட்டவட்டமாக தெளிவாக்கியுள்ளது.

காலையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் , இந்த வழக்கில் வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எம்.பி இந்த சட்டத்தின் 31 திருத்தங்கள் பற்றி விவாதிப்பதற்கு சட்டமா அதிபர் எவ்வாறு பிரயாசை பட்டார் என்பதை கூறி இருந்தார்.

தேர்தல் தொகுதி, தேர்தல் தொகுதி ஒருங்கிணைப்பு என்பனவற்றை கையாள்வதும் இதன் உள்ளார்ந்த நோக்கங்களில் ஒன்றாகும். முன்னால் ஜனாதிபதி தனியார் நிறுவனங்களை ஊடுருவிச் செல்லும் கண்காணிப்பு முறை ஒன்றை ஏற்படுத்தி ,அவற்றில் பொருத்தப்படும் கருவிகளின் ஊடாக ஒவ்வொரு பிரஜையையும் உன்னிப்பாக கண்காணிக்கின்ற ஒரு செயல்முறையை தோற்றுவித்திருந்தார்.

இந்தியாவின் பிரபல விமர்சகரான கலாநிதி பரகலா பிரபாகர் (Dr.Parakala Prabakar) அவருடைய "Crooked Timber Of New India" நூலில்

இவ்வாறான சமூக ஊடகங்களை அரசாங்கம் கட்டுப்படுத்த கூடாது என்றும் அவற்றின் மீது அரசாங்கத்தின் அழுத்தம் பிரயோகிக்கப்படக் கூடாது என்றும் கூறிஇருக்கிறார். தரவுகள்,தகவல்கள் திரட்டப்படுவதோடு, உளரீதியான தொல்லைகளும் ஏற்படுத்தப்படுவது பற்றியும் குறிப்பிடுகிறார். சமூக வலைத்தளங்களில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அவர் வலியுறுத்தியிருக்கிறார். வலைத்தளங்கள், சமூக ஊடகங்கள் இன்று பாரிய யுத்தகளமாக மாறி இருக்கின்றன. அவை அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கின்றன என்கிறார். ஆகவே அரசாங்கம் இவற்றை முடக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன என்கிறார். அவர் ஒரு நேர் சீரான திறனாய்வாளர்.

சிறந்த ஒரு விமர்சகராக இந்திய வட்டாரங்களில் அவர் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் வேறு யாரும் அல்லர், இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர்.

இலங்கையில் குற்றச் செயல்களைப் பொறுத்தவரை , ஏற்கனவே உள்ள சட்டங்களைகக் கொண்டே அவற்றைக் கையாள முடியும். அதற்கான ஏற்பாடுகள் அந்த சட்டங்களில் அடங்கியுள்ளன. குற்றவியல் கோவையில் 291,291(A), 291(B), 484, 485 ஆகியவை மூலம் அவற்றை கையாள முடியும் அவ்வாறே ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் அப்பாவி மக்கள் வெளியிட்ட, அப்பாவித்தனமான சில கருத்துக்களுக்காக இந்த சட்டத்தின் ஊடாக தண்டிக்கப்பட்டி ருக்கிறார்கள். உண்மையிலேயே, வெறுப்பூட்டக்கூடிய பேச்சு பேசியவர்கள் இதனால் தண்டிக்கப்படவில்லை. அவர்களுக்கு அரசாங்கத்தின் அனுசரணை இருந்து வந்துள்ளது.

அவ்வாறே கணினி சம்பந்தமான குற்றச் செயல்களுக்கு தண்டிப்பதற்கும் அதற்குரிய சட்டம் வேறாக இருக்கிறது.

சில கட்டளை சட்டங்களும் எடுத்துக்கொண்ட சில கட்டங்கள் சட்டங்களும் உள்ளன. மின்னியல் பரிமாற்ற சட்டம் போன்றவையும் உள்ளன. ஆகவே அவ்வாறிருக்கும் பொழுது ஏன் அரசாங்கம் அவசரப்பட்டு இந்த சட்டமூலத்தைகொண்டு வர வேண்டும்?.

உரிய முறையில் குற்ற செயல்களை கையாள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே இருக்கத்தக்கதாக, சட்டமும் ஒழுங்கும் பொறிமுறையும் (Law and Order Machinery) சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையும் (Law Enforcement Machinery) ஏன் இதில் தலையிட்டு கடும் போக்கை கடைபிடிக்கின்றன?

நேற்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் முக்கியஸ்தர்களும் பங்கு பற்றிய ஒரு கலந்துரையாடலில் சிறந்த சட்டத்துறை பேராசிரியர் சாவித்திரி குணசேகர இந்த சட்டமூலம் பற்றி கண்டித்துப் பேசினார். இந்த சட்ட மூலம் கொண்டுவரப்படுவதன் நோக்கம் சந்தேகத்துக்கு இடமானது என்று அவர் காரசாரமாக விமர்சித்தார்.

இந்த சட்ட மூலம் சிங்கப்பூரின் "Online Falsehood and Manipulation Act"என்ற சட்டத்தின் அடிப்படையில் வரையப்பட்டதாக சம்பந்தப்பட்ட அமைச்சர் கூறுகின்றார். ஆனால், அதற்கும் இதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. அது குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டதல்ல. ஆனால் ,இங்கு நிலைமை வேறு.

“அரகலய ” வின் எழுச்சியைக் கண்டு அரசாங்கம் வெகுண்டோடுகின்றது அவசர ,அவசரமாக இதனை நிறைவேற்றிக் கொள்ளப் போகின்றது. அதாவது இந்த சட்டத்தை அப்பாவி மக்களின் தொண்டைக்குழிகளுக்குள் வலிந்து திணிக்க போகின்றது.

”கண்ணியப்படுத்துவதுக்காகவே கொண்டு வருகிறோம்அவர்களை பாதுகாப்பதற்காகவே கொண்டு வருகிறோம் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் இதனைச் செய்யத் துணிந்திருக்கிறது. ஆணைக்குழுவிற்கு நண்பர்கள்”நியமிக்கப்படுவார்கள். நாங்கள் இந்த சட்டத்தை எதிர்த்து வாக்களிப்போம் என்றார்.

## சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை புஹாரி தமாம் மஜ்லிஸ்



(பேருவளை பீ.எம்.முக்தார்)

சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா புஹாரித் தக்கியாவில் 145 வது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் எதிர் வரும் 11.02.2024 திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் அல் ஆலிமுல் பாழில் வஷ் ஷெய்கு காமில் சங்கைக்குறிய அஷ்செய்கு அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தலைமையில் நடைபெறும்.

மேற்படி புஹாரிக் கந்துஸரியை முன்னிட்டு இலங்கை ரயில்வே திணைக்களம் 145வது வருடமாகவும் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி சனிக்கிழமையும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பு – அளுத்கமை, காலி – பேருவளை இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தவுள்ளது.

இந்த இரு தினங்களிலும் கரையோர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல கடுகதி ரயில்வண்டிகளும் பேருவளை ரயில் நிலையத்தில் நிருத்தப்படும்.

மேற்படி மஜ்லிஸ் ஜனவரி 08 ஆம் திகதி திங்கட் கிழமை அதிகாலை ஆரம்பமானது. வெள்ளிக்கிழமை தவிர எனைய நாட்களில் ஹதீஸ் பராயனம் மற்றும் ஹதீஸ் விளக்கவுரை இடம்பெற்று வருவதோடு பெப்ரவரி 11 ஆம் திகதி தமாம் பெரிய கந் தூரியுடன் இனிதே நிறைவு பெறும்.

நாட்டின் நாளா பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இஸ்லாமிய சகோதரர்கள் இப்புனித மஜ்லிஸில் கலந்து கொள்வர்.

பேருவளை பொலீஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மெற்கொள்வர்.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## குதிரை வெளியில் பாய்ந்த பின் லாயத்தை மூடுவதில் பயனில்லை

குதிரையை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் குதிரை லாயத்தில் இருக்கும் போது லாயத்தை பூட்டி வைத்துக் கொள்ள வேண்டும். குதிரை லாயத்திலிருந்து வெளியே பாய்ந்து ஓடிய பின் லாயத்தை முடுவதில் பயனில்லை.

குதிரை பாய்ந்து சென்ற பின் எந்த நியாயத்தையும் கூறுவதில் பயனில்லை. ஓடிய பின் மீண்டும் புகுவது முடியாமல் போய்விடும்.

சில தினங்களுக்கு முன் முஸ்லிம் கலாசார விவகார திணைக்களம் விடுத்துள்ள அறிக்கைகளை பார்த்த பின் இதைத்தான் நான் கூறவேண்டி உள்ளது. அண்மையில் கிழக்கு மாகாண மதரஸா ஒன்றில் கற்று வந்த ஒரு மாணவன் உயிரிழந்தது நாம் அறிந்த விடயமே.

அவன் தூக்கில் இட்டுக் கொண்டான் என முதலில் அறிவிக்கப்பட்ட போதும் பொலிஸ் விசாரணைகளின் பின் அந்த மாணவன் கொலை செய்யப்பட்டு பின் தூக்கில் தொங்கவிடப்பட்டுள்ளான் என்பது வெளிவந்தது. இந்த மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பாக ஒரு உஸ்தாத் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார். நீதிமன்றம் அந்த உஸ்தாதை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டது. பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பான சாட்சிகளும் கிடைத்துள்ளன. அந்த மதரசாவில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமராக்கள் இருந்த போதும் இச்சம்பவத்தின் பின் அந்த கேமராவின் பதிவுகள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன. இதனை சி.சி.டி.வி. கேமராவுடன் தொடர்புடைய தொழில்நுட்பவியலாளர் சாட்சியமாக கூறியுள்ளார். அந்த காட்சிகளை அகற்றும் படி அந்த உஸ்தாத் உத்தரவிட்டுள்ளதாகவும் பின் அதனை தரும்படி கேட்டதாகவும் அந்த சாட்சியாளர் கூறினார். இந்த நிலையில் அந்த மாணவனின் கொலைக்கும் குறிப்பிட்ட உஸ்தாதுக்கும் சம்பந்தம் உள்ளதாக கருதப்படுகிறது. ஒரு மாணவனை உயிர் பிரியும் வரை தாக்கப்படுவது என்பது லேசாக எடுத்துவிட முடியாது. மாணவன் எவ்வளவு பாரதூரமான பிழையை செய்திருந்தாலும் அவன் உயிர் பிரியும் அளவிற்கு தாக்குவதற்கு மதரசாவில் எவருக்கும் அதிகாரம் இல்லை. அவர்களுக்கு மட்டுமல்ல தாய், தகப்பன், சகோதர, சகோதரிகளுக்கும் கூட அதிகாரம் இல்லை. அவ்வாறு செய்வது மாபெரும் குற்றச் செயலாகும். குற்றம் சரியாக நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனை கூட வழங்கப்படலாம்.

இச்சம்பவம் மனித உரிமையுடன் சம்பந்தப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் குற்றவியல் சட்டத்துக்கும் உட்பட்டுள்ளது. சுருக்கமாக கூறினால் மாணவர்களை அடித்த பல ஆசிரியர்கள் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளனர், சிறைவாசமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நானும் பாடசாலையில் அடிபட்டவன், ஆனால் காயம் வராத அடிகள் நிறைய கிடைத்துள்ளன. அந்த அடிகள் என்னை இந்த நிலைக்கு உயர்த்தி இருக்கிறது. அந்த ஆசிரியர் பெருந்தகைகளை இன்னும் நினைவு கூறுகின்றேன். ஏனெனில் அந்த மகான்கள் எங்களை திருத்தவே அடித்தார்கள். நாங்கள் திருத்திக் கொண்டோம். இங்கு நான் அந்த அடிகளை கூறவில்லை. உயிர் பிரியும் வரையிலான அடிகளையே கூறுகின்றேன். எவரையும் உயிர் பிரியும் வரை தண்டிக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை. இவற்றை கொலை என்றே கருத வேண்டும்.

விடயத்திற்கு வருவோம். அந்த உஸ்தாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதற்கிடையில் முஸ்லிம் கலாசார விவகார திணைக்களம் ஒரு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிவிப்பு, குறிப்பிட்ட அந்த மாணவனின் மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பதே இந்த அறிவிப்பாகும். அதாவது இதைப்பற்றி விசாரித்து திணைக்களத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க சிலரைக் கொண்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமும், அமைச்சர்களும், அரச நிறுவனங்களும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக குழுக்களை, கமிஷன் சபைகளை, ஆணை குழுக்களை நியமிப்பதுண்டு. இவை பல லட்சங்களை செலவழித்து விசாரணைகளை நடத்தி அறிக்கைகளை தயாரித்து குறிப்பிட்டவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். நானும் எனது வாழ்நாளில் இவ்வாறான குழுக்களுக்கும், கமிஷங்களுக்கும், ஆணை குழுக்களுக்கும் எனது அறிக்கையையும், பரிந்துரைகளையும், கருத்துக்களையும் எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ளேன். அவற்றின் அழைப்பின் பேரில் அங்கு சென்றோ அல்லது நேரடியாகவோ கருத்துகளை தெரிவித்துள்ளேன். அவற்றுக்கு நன்றி தெரிவித்துக் கடிதங்களும் வந்துள்ளன. அந்த அறிக்கைகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டமையும் ஊடகங்கள் மூலமாக கண்டறிந்தேன். சில சந்தர்ப்பங்களில் நானும் அழைப்பின் பேரில் கலந்து கொண்டுள்ளேன். ஆனால் அறிக்கைகளுக்கும், சிபாரிசுகளுக்கும் என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை தெரியவில்லை. அவை மூடிய பெட்டிகளுக்குள் உள்ளன.

இந்த அறிக்கையை வைத்துக்கொண்டு திணைக்களம் என்ன செய்ய முடியும். குற்றவாளிக்கு இஸ்லாமிய சட்டப்படி கொலை தண்டனை அல்லது சிறைவாசம் வழங்கலாமா? ஏனைய அறிக்கைகளுக்கு வந்த முடிவு இந்த அறிக்கைக்கும் நடந்து விடும். எனவே தான் நான் இங்கு கூறுவது. குதிரை வெளியே பாய முன் லாயத்தை சரியாக மூடிவிடுங்கள் என்பதே.

பாடசாலை ஆசிரியர்களுக்கு சட்டம் இருக்கிறது. நாட்டில் மனித உரிமை என்று ஒன்று இருக்கிறது. இவற்றின் ஆசிரியருக்கு தெளிவுப்படுத்தவும். கற்றுக்கொடுக்கவும் பயிற்சி கல்லூரிகள் இருக்கின்றன. பாடநெறிகள் உள்ளன. பயிற்சி பட்டறைகள் நடத்தப்படுகின்றன. எனவே மாணவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், எதுவரை அடிக்கலாம். காயப்படும் வரை அடிக்கலாமா? எந்த நிலை வரை தாக்கலாம் என்பது பற்றி ஆசிரியர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர். அதேபோல உயர்க் கல்வித் தகைமை உள்ளோர் அல்லது ஆசிரியர்கள் பள்ளி பயிற்சி பெற்றோர் மாத்திரமே ஆசிரியர்களாக பாடசாலையில் நியமிக்கப்பட்டு இருக்கின்றனர். இவர்களுக்கு காலத்துக்கு காலம் பயிற்சி பற்றறைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் மதரஸா உஸ்தாத்மார்களுக்கு இப்படி ஒன்றுமே இல்லை. கற்பிக்கக்கூடிய கல்வித்தகைமை தெளிவாக குறிப்பிடப்பட வில்லை. பரிசீலனை செய்ய அளவுகோல்களும் இல்லை. அவர்களுக்கு கற்பிக்கவும், பயிற்சி வழங்கவும், பயிற்சி நிலையங்கள் இல்லை. அவர்களை வழிநடத்த அரச நிறுவனங்களும் இல்லை. எனவே, அவர்களை கண்காணிக்க முஸ்லிம் விவகார திணைக்களம் ஒரு குழுவையை அல்லது சபையை அல்லது கமிஷன் ஒன்றை நியமித்துள்ளதா?

ஒரே வசனத்தில் கூறுவதென்றால், மதரஸாக்களை நிர்வாகிக்கவோ, அதன் உத்தியோகத்தர்களை பரிசீலிக்கவோ, அவற்றிற்கு ஆலோசனை வழங்கவோ அவர்களுக்கு சட்டதிட்டங்களையும், சுற்றி நிருபங்களையும் அமைத்து வெளியிட ஒரு அரச நிறுவனமில்லை. பொதுவான பாடத்திட்டங்களும் இல்லை. சிபாரிசு செய்ய நிறுவனங்களும் இல்லை. பரீட்சைகளும் ஒரே தரத்தில் இல்லை. அந்தந்த மதரஸாக்களில் தமக்கு தாமே பாடத்திட்டங்களை அமைத்துக் கொண்டு, அவர்களே பரீட்சைகளை நடத்தி, அதே உஸ்தாத்மார்களே பரீட்சை விடைத்தாள்களையும் திருத்தி, சித்தி அடைய செய்து, பட்டங்களை அவர்களே வழங்கிக் கொள்கின்றார்கள்.

எனவே எல்லா மதரஸாக்களிலும் கற்று வெளிவரும் மௌவிமார்கள் ஒரே தரத்தில் இல்லை. இதேபோன்று மத்ரஸ ாவிலுள்ள மாணவர்களின் ஒழுக்கக் கட்டப்பாடுகள் முறையாக இல்லை. அத்தோடு உஸ்தாத்களுக்கும் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் தேவை. அவர்களும் எல்லை மீறக் கூடாது. உஸ்தாத்மார்கள் மாணவர்களிடம் சொந்த வேலை வாங்குவது, காலை பிடித்து விடுவது, தடவி விடுவது போன்ற கருமங்களை செய்து கொள்ளும் நிலை சில மத்ரஸாக்களில் உள்ளதாக கேள்விப்பட்டிருக்கின்றோம். எனவே தான் உஸ்தாத்களுக்கும் ஒழுக்கக் கட்டுப்பாடு, சட்டம் வேண்டும். மாணவர்களில் கற்பிக்கும் வேலையை மாத்திரம் செய்யும் நிலை ஏற்பட வேண்டும்.

எனவே, பின்வரம் மாற்றங்கள் மத்ரஸாக்களில் ஏற்படவேண்டும்.

1. முதலில் பொதுவான பாடத்திட்டம் வேண்டும்.
2. இறுதி பரீட்சை, பொது பரீட்சை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.
3. அல் ஆழிம் பரீட்சை போன்ற பரீட்சைகள் அரசாங்க பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இடைநிலை பரீட்சைகள் ஏதாவது ஒரு பொது அமைப்பினால் நடத்தப்பட்டு விடைத்தாள்களின் திருத்தம் வேறு மத்ரரஸா மூலம் செய்யப்பட வேண்டும்.
5. மத்ரஸா உஸ்தாத்களுக்கான நியமனங்கள் தகுதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.
6. எல்லா உலமாக்களும் வேண்டிய போது, வேண்டிய இடத்தில் மதரஸா ஆரம்பிக்கும் நிலை மாற்றப்பட வேண்டும்.
7. உஸ்தாத்மார்கள் விஷேட பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதற்கென பயிற்றுவிக்கும் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
8. இதற்கான பாட நெறியினை ஆரம்பித்து சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.
9. தேவைப்படின் இதற்கான கட்டணத்தை உருவாக்கி குறிப்பிட்டவர்களிடம் அல்லது அவர்களை சேவைக்கு அமர்த்த உள்ள மதரஸாக்களிடம் அறவிடலாம்.
10. அதேபோன்று காலத்திற்கு காலம் விஷேட பயிற்சிகள், பயிற்சி பற்றறைகள் நடத்தப்பட வேண்டும்.
11. முக்கியமாக மதரஸாக்களை நிர்வாகிக்க ஒரு சபை அமைக்கப்பட வேண்டும். இதனை முஸ்லிம் கலாசார விவாகார அமைச்சினால் செய்ய வேண்டும்.
12. அரச அங்கீகாரம் பெற்ற சபை ஒன்று இருக்க வேண்டும். அந்த சபையில் உலமாக்கள் மட்டுமன்றி கல்விமான்களும், நிர்வாகத்தில் அனுபவம் உள்ளவர்களும் நியமிக்க பட வேண்டும்.
13. திணைக்களத்தில் மத்ரஸா பிரிவொன்று அமைக்கப்பட வேண்டும்.

# மட்டுவில் நிர்க்கதியான முஸ்லிம்களை மீளக் குடியேற்றத் தவறிய அரச நிர்வாகம்!



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர் – 11)

மாவட்ட நிருவாகத்தின் பாரபட்சம் சட்டப்படி அரசாங்க வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளின் நிருவாகத்திற்குட்பட்ட நிலப்பரப்புக்கள் மட்டக்களப்பு மாவட்ட அரச நிருவாகத்தினால் பாரபட்சம் காட்டப்பட்டு அபகரிக்கப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஆண்டனுபவித்து வந்த தனியார் பூர்வீகக் காணிகளை வழங்குவதற்கும் மாவட்ட நிருவாகம் மறுத்து வருவது கவலையளிப்பதாகவே உள்ளது.

இதன்மூலம் கடந்த 34 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிளாக்கப்பட்டு நிர்க்கதியான முஸ்லிம்களை இன்றுவரை மீளக் குடியமர்த்துவதற்கான முயற்சிகளை அதிகாரிகள் எடுக்காததன் மூலம் மாவட்ட நிருவாகம் முஸ்லிம்களைப் புறக்கணிக்கிறது என்பது நிரூபணமாகிறது.

ஒவ்வொருவருக்கும் தமது பரம்பரை வாழ்விடங்களில் சென்று மீளக்குடியேறுவதற்கான இடம்பெயர் சுதந்திரம் சர்வதேச ரீதியான சட்டங்களின் தத்துவங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

அப்படி இருந்தபோதும்கூட, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல கிராமங்களிலிருந்தும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட நிலையில் தமது பூர்வீகப் பகுதிகளை விட்டுப் பிரிந்து வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் அவர்களது பாரம்பரிய பூர்வீக வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட நிருவாகிகள் அனுமதிக்காதிருப்பது பாரிய மனித உரிமை மீறலாகும்.

அந்த வகையில் கல்குடா முஸ்லிம்களும் தமது பூர்வீக வாழ்வாதார நிலங்களையும் வாழ்விடங்களையும் இழந்த நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கோறளைப்பற்று வடக்கு - வாகரை, கோறளைப்பற்று மேற்று - ஓட்டமாவடி, கோறளைப்பற்று - வாழைச்சேனை, கோறளைப்பற்று தெற்கு - கிரான் ஆகிய பெரும் 3 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள கிராமங்களிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு தற்போது 34 ஆண்டுகள் கடந்து விட்டன.

இருந்தபோதும், அவர்கள் தமது பழைய வாழ்விடங்களுக்குச் சென்று மீளக் குடியமரவோ விவசாயம் கால்நடை வளர்ப்பில் ஈடுபடவோ, இன்னபிற தொழில்துறைகளைச் செய்யவோ மாவட்ட அரச நிருவாகம் அனுசரணை வழங்கவில்லை.

இன வன்செயல்கள் கல்குடா முஸ்லிம்களின் பொருளாதாரத்தையும் அழித்தொழித்தன. ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வந்த உடமைகள் பறிக்கப்பட்டும், எரிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் சிதைக்கப்பட்டும் அழிவுக்குள்ளாக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளையும் பூமிகளையும் ஆயிரக்கணக்கான கால்நடைகளையும் இழக்கச்செய்த இனக் கலவரங்களின் பாதிப்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் இன்னமும் மீள் எழவில்லை.

கடந்த 34 வருடங்களுக்கு மேலாக கபளீகரம் செய்யப்பட்டுள்ள கல்குடாத் தொகுதி முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகள், கட்டமைப்புக்கள் பற்றிய விவரங்களை தமது அமைப்பு சேகரித்துள்ளதாக தெரிவிக்கிறார் கல்குடா முஸ்லிம் பிரதேசங்களின் வரலாற்றுத் தொகுப்பு ஆய்வு மைய செயற்குழு உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளரும் முன்னாள் கிராம அலுவலருமான யூ.எல். முஹம்மது நஜீப்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் அபகரிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகள்:

காயாங்கேணி, வட்டவான், இறாலோடை, மாங்கேணி தெற்கு, கிரிமிச்சை, பனிச்சங்கேணி, அவக்கர்ரகுடா (அபூபக்கர் குடா), உப்புக்கொட்டு, முகத்துவாரம், ஆனையடிமடு, கருவேப்பங்கேணி, மதுரங்கேணிக்குளம் (அங்கு ஒரு பாடசாலை, பள்ளிவாசல் எல்லாம் இருந்தன. அவையெல்லாம் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது) குஞ்சங்குளம், (ஓலையால் வேயப்பட்ட பெரிய பள்ளிவாசல் இருந்த கிராமம்) ஆனைசுட்டகுளம், புளியம்பொத்தானை, கருங்காலிச்சோலை, வெள்ளாமைச்சேனை, பள்ளச்சோலை, பாலையடி ஓடை, கபுறடிக்குடா, குப்பிளாக்கொடி, குறாத்தை, கேணிமடு, ஊரியங்கட்டு, வாகரை மத்தி, வாகரை வடக்கு, பால்சேனை, கட்டுமுறிவு, ஆண்டான்குளம், கதிரவெளி, அம்மந்தனாவெளி, வம்மிவட்டவான், கோமத்தலாமடு, ஓமடியாமடு, சல்லித்தீவு, புல்லாவி, காயாங்கேணி, உசன் ஏத்தம், ஆகிய இடங்களிலெல்லாம் முஸ்லிம்கள் தொழில் வளங்களோடு வாழ்ந்து வந்துள்ளார்கள்.

ஆயினும் திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு வன்முறை மூலம் முஸ்லிம்கள் அங்குள்ள தமது வாழ்வாதார, வாழ்விடக் காணிகள் அபகரிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்விதம் அவர்கள் மொத்தம் 3542.61 ஏக்கர் நிலங்களைப் பறிகொடுத்துள்ளனர்.

அதேபோல, கோறளைப்பற்று - வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலடங்கும் பாசிக்குடா, கல்குடா, பன்றிமடு, கும்புறுமூலை ஆகிய கிராமங்களில் 371 ஏக்கர் காணிகளை முஸ்லிம்கள் இழந்திருக்கின்றார்கள்.

உலகப் பிரசித்தி பெற்ற சுற்றுலா மையமான பாசிக்குடாவை ஒட்டிய இடங்களில் அமைந்துள்ள இக்காணிகள் தற்போதைய காணி மதிப்பீட்டில் மிகப் பெறுமதியானவை. இந்தக் காணிகள் முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், கோறளைப்பற்று தெற்கு எனும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அடங்கும் பின்வரும் இடங்களில் இனப்பாகுபாடு காரணமாக முஸ்லிம்களின் நிலபுலன்கள் பறிக்கப்பட்டுள்ளன.

வெள்ளநாவல், ஆனைவணங்கிக்கண்டம் சந்தியாற்றுவெளி, ஆலையடிக்குடா, அக்குராணை (இங்கே குடியிருப்புக்காணிகள் 112.6 ஏக்கர்) ஊத்துச்சேனை வயற்காணிகளும் குடியிருப்புக் காணிகளுமாக 84.1 ஏக்கர்கள், ஜப்பார் திடல் மேட்டுக்காணி 03 ஏக்கர்கள் (இந்த இடம் பலவந்தமாக அபகரிக்கப்பட்டு தற்சமயம் அந்தப் பகுதியில் ஒரு தமிழர் கூட குடியிருக்காத நிலையில் அங்கு ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது) குளத்துமடு (இங்கே குடியிருப்புக் காணிகள் 68.3 ஏக்கர்) வாகனேரி கபுறடிப்பகுதி 54.9 ஏக்கர், வாகனேரி ஊர்முனைத்திடல், வன்னியனார்த்திடல், வம்மியடி குடியிருப்புக் காணிகள் 34.3 ஏக்கர், பொத்தானை அணைக்கட்டு (இங்கே குடியிருப்புக்காணிகள் 97.9 ஏக்கர்), கூட்டுறாணச்சந்தி (இங்கே சேனைப் பயிர்ச் செய்கை மேட்டுக்காணிகள் 43.5 ஏக்கர்), முள்ளிவட்டவான் (இங்கே வயற்காணி 80.7 ஏக்கர்), பூலாக்காடு டாப்பரின் பகுதி 31 ஏக்கர், முருக்கன் ஓடை (இங்கே குடியிருப்புக்காணி 44.7 ஏக்கர்), கள்ளிச்சை (இங்கே குடியிருப்புக்காணி 160 ஏக்கர்), கடவத்தமடு (இங்கே சேனைப்பயிர்ச்செய்கை மேட்டுக்காணிகள் 174.67 ஏக்கர்கள்.

இது நாட்டின் பெரும்பான்மை சமூகத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது) என வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேச முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் மொத்தம் 1262.47 ஏக்கர் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.


இக்காணிகள் 2000ம் ஆண்டுவரை கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குள்ளிருந்தவை. கோறளைப் தெற்கு எனும் கிரான் புதிய தமிழ் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டதன் பின்னர் இனவாதச் செயற்பாட்டால் இந்தக் காணி நிருவாகம் முஸ்லிம்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டு தற்போது கிரான் தமிழ் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டு நிருவாகம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால், முஸ்லிம்களால் இக்காணிகளைப் பரிபாலனம் செய்ய முடியவில்லை.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.. வரும் வாரமும் வரும்)







கிழக்கு ஆளுணர் செந்தில் தொண்டமான் அண்மையில் மூதூர் பிரதேச சபைக்கு விஷேட விஜயம்ஒன்றினை மேற்கொண்டார்.இதன்போது பிரதேச சபையின் தேவைகள் எதிர்காலமுன்எடுப்பு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாகவும் கலந்தாலோசிக்ப்பட்டது. இதன்போது விஷேடமாக கடந்த அண்மையில் சம்பூரில் நடந்த ஜல்லிக்கட்டு நிகழ்விற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பிரதேச சபை செயலாளர் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்தார். (எஸ்.ஏ.பறூஸ்)

# கிழக்கில் மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ள நன்னீர் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி



(எம்.ஐ.எம்.அஸ்ஹர் )

அன்றாடம் தொழில் செய்து தமது ஜீவனோபாயத்தை கடத்தும் மற்றுமொரு கூட்டம் தான் மீனவ சமூகம். அன்றைய தினம் தமக்கு சரியாக மீன் படவில்லையென்றால் அந்த குடும்பத்தின் நிலை அவ்வளவுதான்.கடலையும் களப்பையும் ஆற்றையும் நம்பி இவர்கள் வாழ்வு சுழன்று கொண்டிருக்கின்றது.

கடல் கொந்தளிப்பு, வேகமான காற்று, விடாத அடைமழை, உக்கிரமான வெள்ளம் என்பன மீனவர்களுக்கு எதிரியாக தென்படும் போதெல்லாம் இவற்றையும் சவாலாக ஏற்று மீன்பிடிக்கச் சென்று உயிரிழந்தவர்களும் காணாமல் போனோரும் பலர்.

காற்று, குளிர், கடும் வெயில் தாண்டி தமது முயற்சி வெற்றி பெற்றால் அன்றைய தினம் மீனவர்கள் படும் சந்தோசத்திற்கு அளவே இல்லை.

கடலுக்கு படகுகளில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கரைக்கு திரும்பி வருவார்கள் என்பதில் எந்த உத்தரவாதமும் இல்லை. அடிப்படை

வசதிகள் எதுவுமன்றி குடிசைகளில் மனைவி மக்களுடன் மிகவும் கஸ்டமான வாழ்க்கைக்கு உள்ளாகியுள்ள இம் மீனவ சமூகம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பல உயிர்களை கடலுக்கு இரையாக்கி ,உடமைகள் இருப்பிடங்களை இழந்து நின்ற போது அவர்களுக்கு உதவிக் கரம் நீட்ட சர்வதேச தன்னார்வு நிறுவனங்கள் முன்வந்தன.

இதுவொரு பாராட்டத்தக்க விடயமாக இருந்தாலும் தாம் புரியும் தொழிலுக்கு சம்பந்தமில்லாத இடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளதால் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னேடுத்துச் செல்வதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

# போர்வை பள்ளிவாசலுக்கு 17 ஆண்டுகளுக்கு பின்னர் புதிய நிர்வாக சபை தெரிவு



இலங்கையிலும் குறிப்பாக தென் இலங்கையிலும் பிரசித்தி பெற்ற போர்வை முஹியத்தீன் ஜூம்மா பள்ளிவாசலுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு இன்று இடம்பெற்றது. தேர்தல் மூலம் இடம்பெற்ற இந் நிர்வாக சபைக்கு ஏழு புதிய உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

இப் பள்ளிவாசலை கடந்த 17 ஆண்டுகளாக ஒரே நிர்வாக சபை உறுப்பினர்கள் நிர்வாகம் செய்து வந்த நிலையில் குறித்த நிர்வாக சபைக்கு 2019 ஆம் ஆண்டு முதல் பலத்த எதிர்ப்பு ஊர் மக்களிடம் காணப்பட்டது.

இந்நிலையில் அன்று முதல் புதிய நிர்வாக சபையை தெரிவு செய்யுமாறு பல விதங்களில் முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்திடம் கோரி வந்த நிலையில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு பின்னர் இன்று தேர்தல் இடம் பெற்றது.

இப் பள்ளிவாசலுக்கு 3 வருட காலத்தை உடைய புதிய நிர்வாக சபையொன்றை உருவாக்க வேண்டும் என்று 15 ஆண்டுகளுக்கு பின்னர் ஊர்மக்களுக்கு ஆசை. அதற்காக 6 வருடங்களாக முயற்சி செய்கிறார்கள். நிர்வாக சபை உறுப்பினர்களாக 7பேரை தெரிவு செய்ய வேண்டும் என்று 14 பேரை களத்தில இறங்குகிறார்கள்.

தேர்தல் வைக்க பார்த்த முதல் ஆண்டு ஈஸ்டர் குண்டு தாக்குதல் காரணமாக தேர்தல் தடைப்பட்டது. பின்னர் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூன்று ஆண்டு கழிகின்றது. ஐந்தாம் ஆண்டு வைக்க பார்த்தால் நாட்டில் தேர்தல் வைக்கும் போது பள்ளிவாசல்களில் தேர்தல் வைக்க வேண்டாம் என்று அரசாங்கம் தடை விதிக்கின்றது. இனி ஆறாம் ஆண்டு (25.01.2023) தேர்தல் இடம் பெற்றது.

இத் தேர்தலில் 16 பேர் களமிறங்குகிறார்கள். அதில் ஏ. எஸ். எம். நளீர் (327), எம். என். எம். நிஸ்தார் (302), எச். ஜே. எம். ரிகாஸ் (247), ஏ. பீ. பௌஸ்/ல் அமீன் (238), எம். எச். எம். லாஹிர் (235), எம். எஸ். எம். ரஷீத் (206), எம். என். எம். நுஸைர் (184) ஆகியோர் முதல் ஏழு இடங்களை பெற்று தெரிவாகியுள்ளனர். மேலும் குறித்த நிர்வாக சபைக்கான சட்டக்கோவை கடந்த 1970 ஆம் ஆண்டுக்கு பின்னர் 2023 ஆம் ஆண்டு ஊர் மக்கள் மற்றும் பொது மக்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட அல் ஹாஜ் எச். எல். எம். பாரூக் தலைமையிலான நிர்வாக சபை காலத்தில் 2009 ஆண்டு தேசிய மீலாது விழா இடம்பெற்றதுடன் குறித்த விழாவில் விடுதலை புலிகளின் இறுதி தற்கொலைதாக்குதல் இடம்பெற்றது. மேலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இறுதியாக ஜனாதிபதியாக இருந்த 2014 ஆம் குறித்த பள்ளி வாசலுக்கு விஜயம் செய்தமை போன்றவை குறித்த நிர்வாக சபைதொடர்பாக வரலாற்றில் எழுத வேண்டிய விடயங்களாகும்.

(இப்னு அஸாத்)

## பிரதி அதிபரானார் ஷரீஃபா




Kl/Aluthgamweediya Muslim Girls' Central College தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களில் ஒருவராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

திருமதி M.J.F.ஷரீஃபா கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டதாரியான இவர் (PGDE) பட்டப்பின் டிப்ளோமாவினை கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார்.

விசேடமாக (M.Ed) முதுமாணிப்பட்டத்தை தேசிய கல்வி நிறுவகத்தில் நிறைவு செய்த பின் 2019 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவைப் போட்டிப்பரீட்சைக்குத் தோற்றினார்.


பரீட்சையில், 191 புள்ளிகளுடன் உயர் சித்தி பெற்று கொழும்பு கிரீன்பாத் மனித வள அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற்ற தரம் iii அதிபர்களுக்கான முன் சேவைப் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

Kl/Aluthgamweediya Muslim Girls' Central College தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களில் ஒருவராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.



மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க அண்மையில் புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

## சிறந்த நாவலுக்கான விருது பெற்ற "வேராகிப் போன மனிதர்கள்"




இரா உதயணன் இலக்கிய விருதுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலாகத் தெரிவு செய்யப் பட்டதோடு, அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் நடந்நும் இலங்கை படைப்பாளிக்கு நடத்தப்பட்டு வரும் இலக்கியப் போட்டியில் 2022 ஆம் ஆண்டுக்கான

2021 ஆம் ஆண்டுக்கான நடத்தப்பட்ட கொடகே ஆக்க இலக்கியப் போட்டியில் சிறந்த நாவலாகத் தெரிவுச் செய்யப்பட்ட ஏ.எஸ். உபைதுல்லாவின் "வேராகிப் போன மனிதர்கள்" நாவல், 2022 நடந்த கொடகே தேசிய சாகித்திய விழாவில் 2022 சிறந்த நாவலுக்கான விருதினை பெற்று கொண்டது. அடுத்து, இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம இணைந்து வழங்கி வரும் சிறந்த நாலுக்கான விருதினையும் ஏ.எஸ் உபைதுல்லாவின் வேராகிப் போன மனிதர்கள் நாவல் பெற்று உள்ளது.

கொடகே வெளியிட்ட தமிழ் நூல் என்ற வகையில் ஏ.எஸ் உபைதுல்லாவின் வேராகிப் போன மனிதர்கள் நாவல் இத்தனை விருதுகள் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு எமது வாழ்த்துக்கள்

## நானா நீயா அவனா?



சபீர் மொஹமட்

# மரணங்களும் பாடம் கற்பிக்கின்றன!

இன்று மிகவும் ஒரு சந்தோசமான நாள் !!

நரகத்திற்கே போ !! ஒரு கொண்டாட வேண்டிய நாள் இன்று !! மிக்க மகிழ்ச்சி !!

இவை கடந்த 25 ஆம் திகதி முகநூலில் பதிவிடப்பட்டிருந்த லட்சக்கணக்கான உழஅஅநவௌ களில் இருந்து பெறப்பட்ட ஒரு சிலவை. 24ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் முடௌநெ ளுயகநவல டீடைட எனப்படுகின்ற நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. உயிருடன் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு மக்கள் "ஆத்மா சாந்தியடைய" வேண்டும் என உழஅஅநவெ செய்வதால் மிகவும் விரக்தியில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலத்தில் இருந்துள்ளார்கள். இதனை ஒழிக்க வேண்டும் என்பதற்காக கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமே இது, என பலரும் இதை வரைவிலக்கணப்படுத்தி வந்தனர். அன்னிலையில் குறித்த சட்டத்திற்கு ஆதரவாக தமது வாக்கை வழங்கிவிட்டு அதே தினம் நள்ளிரவு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்த அமைச்சர் சனத் நிஷாந்தவின் வாகனம் விபத்திற்கு உள்ளாகி உண்மையிலேயே அமைச்சரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென மக்களுக்கு கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முகநூலில் சனத் நிஷாந்த் மக்களின் வெறுப்பை சம்பாதிப்பதில் மிகவும் பிரசித்தி பெற்றவர். அதே சனத் நிஷாந்த அமைச்சரின் மரணம் இன்று சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய கொண்டாட்டமாக உள்ளது. சில ஊர்களில் வெடிவைத்து மக்கள் இதை கொண்டாடியுள்ளார்கள். 2015 முதல் நான் சமூக வலைத்தளங்களில் இருக்கின்றேன். ஒரு மரணத்தை இலங்கை மக்கள் இவ்வாறு கொண்டாடுவதை நான் அவதானித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ரணசிங்க பிரேமதாச 1993 மே 01 கொல்லப்பட்டபோது இலங்கை மக்கள் அந்த மரணத்தையும் பால் சோறு உண்டு ரபான் தட்டி கொண்டாடியுள்ளார்கள். குண்டு வெடித்த சந்தியை, 'நாய் செத்த' சந்தி என்றும் அழைத்துள்ளார்கள். எனவே நாங்கள் சமூக வலைத்தளத்தில் காண்கின்ற அரசியல்வாதிகளுக்கு எதிரான இந்த வெறுப்பு ஒன்றும் மக்கள் மனதில் புதிதாக தோன்றிய ஒன்று அல்ல. காலாகாலமாக எமது அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் குறித்து மக்கள் மனதில் ஒரு வெறுப்பு இருந்து கொண்டே வந்துள்ளது. சமூக வலைத்தளங்களின் அதீத வளர்ச்சி காரணமாக மக்களின் விருப்பு வெறுப்பின் வெளிப்பாட்டை இன்று இதுபோன்ற சம்பவங்களின் ஊடாக நாம் நேரடியாக காண்கின்றோம். மக்களின் அரசியல்வாதிகள் குறித்த இந்த வெறுப்பின் ஒரு வெளிப்பாட்டை நாம் கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் நாடு பூராகவும் வெடித்த வன்முறைகளில் அவதானித்தோம். அதிலிருந்தும் அவர்கள் எதையும் கற்றுக் கொள்ளவில்லை, என்பது பலரின் கருத்தாக உள்ளது. இப்பொழுது இந்த மரணம் !

சனத் நிஷாந்த இன்று உயிருடன் இல்லை. உயிருடன் இல்லாத ஒருவருடன் எமக்கு எந்த ஒரு அரசியல் பேதமும் இப்போது இல்லை, என ஒரு பதிவை சமூக வலைத்தளத்தில் கண்டேன். ஆனால் இந்த மரணம் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நிச்சயமாக ஒரு பாடமாக அமையும். "எங்களின் வெறுப்பும் சாபமும் ஒருபோதும் உங்களை கைவிடாது" என கடந்த 2022 வருடம் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போது அங்கே வந்திருந்த அப்பாவி பொது மக்கள் சாபமிட்டதை நான் கண்களால் கண்டுள்ளேன்.

2022 மே ஒன்பதாம் திகதி காலி முகத்திடலுக்கு நண்பகல் 12 மணி அளவில் ஏதோ ஒரு பதற்றத்துடன் நான் ஓடினேன். கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் என்னை நோக்கி வந்த காடையர்களுடன் தாக்குப் பிடித்தேன். இயலுமானவரை அங்கே அரங்கேறிக் கொண்டிருந்த குழப்பங்களையும் நாசக்கார செயல்களையும் வீடியோ செய்து கொண்டிருந்தேன். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டடி நீண்ட ஒரு அருவாளை கையில் தூக்கிக்கொண்டு ஒரு உருவம் என்னை நோக்கி ஓடி வருகின்ற காட்சியை கண்ட பின்னும் என்னால் அங்கே இருக்க முடியவில்லை. என்னோடு வந்த மற்ற மூவரும் என்னையும் சேர்த்து இழுத்துக் கொண்டு கண்ணீர் புகைக்கு நடுவே பின்பக்கமாக ஓடினார்கள். பின்னர் அங்கே நடந்த அனைத்தும் இன்று ஒரு வரலாறாக பதியப்பட்டுள்ளது. அன்று 2022 மே ஒன்பதாம் திகதி அமைதியான போராட்டத்தை என் கண் முன்னே பற்ற வைத்த காடையர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ஒருவர் தான் சனத் நிசாந்த. அன்று சனத் நிசாந்த, மஞ்சள் நிற டீ சேர்ட் ஒன்றை அணிந்து கொண்டு இப்போதைய போலீஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுடம் எம்மை நோக்கி வருகின்ற காட்சி இன்னும் என் கண்களுக்குள் உள்ளது.

ஒருபுறம் சனத் நிஷாந்தவின் மரணம் வேடிக்கையாக கொண்டாடப்படுகின்ற அதேவேளை மறுபுறம் ஏன் அவ்வாறு செய்கின்றீர்கள் ? இறந்த ஒருவருக்கு இவ்வாறு செய்வது சரியா ? ஒரு மரணத்தை இவ்வாறு கொண்டாட வேண்டாம், என்றவாறு ஒரு சில வாதங்களை சமூக வலைத்தளங்களில் அவதானித்தோம். அன்று காலிமுகத்திடலில் இருந்த அப்பாவி மக்களை ஆயுதமேந்திய காடையர்கள் தாக்கும் போது எங்கே மனிதாபிமானம் சென்றது? இன்று சனத் நிஷாந்தவின் குடும்பத்தை பற்றி கட்டுரை எழுதுகின்ற எவருக்கும் அன்று அங்கே காலி முகத்திடலில் அடி வாங்கிய அப்பாக்கள் பற்றி தெரியாதா? அரசியல் நம் அனைவருடைய கண்களையும் குருடாகியுள்ளது.

கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என் நண்பன் ஒருவனை சந்தித்தேன். மிக சுருக்கமாக இரண்டே வரிகளில் இந்த "ஐயோ அவர்கள் பாவம். மரணத்தை கொண்டாட வேண்டாம்" என்பதைப் பற்றிய அவனின் அனுபவத்தை கூறினான். "கிட்டத்தட்ட 70,000 உயிர்களை பலி எடுத்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை 'யுத்த வெற்றி' என பால் சோறு உண்டு குதூகலமாக கொண்டாடிய இவர்கள் எப்படி இந்த ஒரு மரணத்தை கொண்டாடுவது பற்றி கதைப்பது !!"

அதேபோல் இன்னும் சிலர், சனத் நிஷாந்தவின் பிள்ளைகள் எதிர்காலத்தில் சமூக விரோதிகளாக வரக்கூடாது. ஆகவே தயவு செய்து இந்த மரணத்தை கொண்டாட வேண்டாம். மௌனமாக இருப்பதே அனைத்தையும் விட சிறந்தது. என்ற கருத்தை தெரிவித்து வருகின்றனர். அப்போது எனக்கு இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் அமைச்சர் ஸ்ரீதரன் அன்று 2021 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஆற்றிய ஒரு உரை ஞாபகத்தில் இருந்தது.

"சுற்றிவர மண் மூட்டைகளால் சூழப்பட்ட ஓர் மர பலகையில் கையில் ஓர் பிஸ்கேத் பக்கட்டும் கையருகில் ஓர் நீர்க் குவளையுமாக எந்த ஒரு சலனமும் இன்றி எதையோ வெறித்து பார்த்த வண்ணம் அமர்ந்து கொண்டிருந்த பன்னீர் வயது பாலகன் பாலச்சந்திரனின் புகைப்படத்தினையும், (பிரபாகரனின் இளைய மகன்) அதே பாலச்சந்திரன் மேலாடை அற்ற மார்பில் 5 துப்பாக்கி சூடுகள் தொலைத்த அடையாளத்தோடு உயிர் பிரிந்த நிலையில் தரையில் கிடந்த புகைப்படத்தினையும் சணல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட கணங்கள் உலகம் எங்கும் வாழும் இதயம் உள்ள மனிதர்களை இனமொழி மதம் கடந்து இரத்தக்கண்ணீர் வடிக்க செய்திருந்தது."

வரலாறு நெடுகிலும் வடக்கிலும், தெற்கிலும் இரத்தத்தை ஒட்டி அதிலே அரசியல் செய்த வரலாற்றைக் கொண்ட இலங்கையர்கள் நாங்கள். மனிதாபிமானம் பற்றி கதைப்பதற்கு யாரும் இங்கே அருகதை அற்றவர்கள். இந்த மரணமாவது எமக்கு எம் தலைவர்களுக்கும் ஒரு படிப்பினையாக அமையட்டும்.

## பல்துறை கலைஞர்களை ஒன்றுசேர்க்கும் கூட்டம்

(உக்குவளை ஜலீல்)

உக்குவளை மற்றும் மாத்தளை பிரதேசத்திலுள்ள பல்துறை கலைஞர்கள் அத்துடன் இலைமறைகாய்களாக உள்ள கலைஞர்களுடன் கலந்துரையாடலொன்றை அவரது மாத்தளை காரியாலயத்தில் நடத்தவுள்ளதாக முஸ்லிம் கலாசார திணைக்கள மாத்தளை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம். ரஹ்மதுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இக்கலைஞர்களின் கலைத்துறை செயற்பாடுகள், எதிர்நோக்கும் சங்கடங்கள் தேவைகள் எதிர்ப்பார்புகள் என்பன பற்றி அவர்களுடன் கலந்துரையாடி அவ்வாறானவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை திணைக்களம் ஊடாகச் செய்துகொடுத்து அவர்கள் மூலமாக கலைத்துறையை மேம்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன் "எமது முத்துக்கள்" எனும் தலைப்பில் கலைஞர்களது விபரத்திரட்டொன்றையும் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, கலைஞர்கள் தமது கலைத்துறை விபரங்களை தமது தொலைபேசி இலக்கம் மற்றும் புகைப்படத்துடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அவர் கோரியுள்ளார்.






நாச்சியாதீவு
பர்வீன்

# கொழும்பு எம்.ஏ. ரஹீமாவின் "சூல்சோறு" சிறுகதை தொகுதி மீதான பார்வை




ஜீவநதியின் வெளியீடாக எழுத்தாளர் கொழும்பு எம்.ஏ. ரஹீமா அவர்கள் எழுதிய பதினைந்து சிறுகதைகள் அடங்கிய "சூல்சோறு" எனும் சிறுகதைத் தொகுப்பு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 10ம் திகதி வெளியிடப்பட்டது.

"சூல்சோறு" சிறுகதைத் தொகுப்பை வாசிப்பதற்கு புத்தகத்தைக் கையிலெடுத்ததும் முதலில் அதன் அட்டைப் படமே என் கவனத்தை ஈர்த்தது. அட்டைப் படத்தைப் பார்த்ததும் முதலில் தலைப்புக்குப் பொருத்தமாக இந்த அட்டைப்படம் இல்லையே என்பதே எனது மனதில் தோன்றியது. எனினும் சிறிது நேரம் அட்டைப் படத்தின் வண்ணக் கலவையை உற்று நோக்கினேன். சட்டென எனது மனதில் தோன்றியது, மனித உணர்வுகளின் மென்கலவைதான்.

கோபம், மகிழ்வு, துக்கம், பொறுமை, ஆசை, இழப்பு, வெறுப்பு, பொறாமை என பல்வேறு உணர்வுகளைச் சுட்டும் நிறக் கலவையாக அட்டைப் படம் அமைந்திருப்பதை புத்தகத்தை வாசித்ததும் உணர்ந்தேன்.

கண்ணை உறுத்தாத நிறத்தில் அட்டையுடனும் 100 பக்கங்களைக் கொண்டதுமாக 15 சிறுகதைகளைத் தாங்கி "சூல்சோறு" பொங்கியுள்ளது. வாசிக்கும் வாசகர் உள்ளத்தில் பல உணர்வுகளை விம்மி எழச் செய்யும் கதைகளையும் கதாபாத்திரங்களையும் அழகாக படைத்துள்ளார் எழுத்தாளர் எம்.ஏ.ரஹீமா.

தான் எழுத ஆரம்பித்த காலங்களின் சில கதைகளையும் அண்மைக் காலங்களில் எழுதிய சில கதைகளையும் சேர்த்து சுவைக் குன்றாது கலந்து "சூல்சோறு" தொகுப்பை எம்மைப் போன்ற வாசகர்களுக்கு விருந்தாக பரிமாறியுள்ளார்.

"சூல்சோறு" சிறுகதைத் தொகுப்பு, நூலுக்கான அணிந்துரையை மூத்த எழுத்தாளர் திக்குவெல்லை கமால் அவர்கள் மிகவும் சிறப்பாக பதிந்துள்ளார். எழுத்தாளரை புதிய வாசகர்கள் அறிந்து கொள்ளும் விதத்திலும், எழுத்தாளரின் ஆழமான சமூகப் பார்வையையும் தனது உரையில் பதிந்துள்ளார். இந்த விடயத்தை நூலை வாசிக்கும்போது நூலாசிரியரின் ஆளுமையை நாம் அறியக்கூடியதாக உள்ளது. ஏனெனில், எழுத்தாளர் ரஹீமா அவர்கள் ஆரம்பக் காலங்களில் எழுதியதன் பிற்பாடு மிக நீண்ட காலமாக இலக்கிய உலகில் இருந்து ஒய்வெடுத்துள்ளார்.

ஆனாலும் எழுத்துலகை விட்டு அவர் பூரணமாக விலகிவிட்டதாகவோ ஒதுங்கிவிட்டதாகவோ என்னால் கருதமுடியாது. ஏனென்றால், நூலாசிரியர் மீள் பிரவேசம் செய்வதன் மூலம் இதனை உறுதிப்படுத்த முடியும்.

பேனையை பிடித்த கைகள் ஒருபோதும் ஓய்வதில்லை. ஓய்வெடுத்து ஒரு கட்டத்தில் அது மீள தன் பயணத்தை ஆரம்பிக்கும். அவ்வாறு நூலாசிரியர் மீண்டும் எழுத ஆரம்பித்தள்ளார் என்பது மகிழ்வான சங்கதியாகும்.

நூலுக்குள் நுழைந்து ஒவ்வொரு கதையாக வாசிக்கும் போதும் வெவ்வேறு விதமான உணர்வினை உள்ளம் உணரக் கூடியதாக இருந்தது. பல்சுவையான உணவுப் பண்டங்கள் பரிமாறும் பந்தியைப் போன்று வெவ்வேறான உணர்வுகளை ஒவ்வொரு கதையிலும் உணரலாம். ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பாடத்தை வாசிக்கும் வாசகர்களுக்கு சொல்கிறது.

"சூல்சோறு" என்னும் கதை ஏழைக்கும் தன்மானம் உண்டென்பதை அழுத்தமாக சொல்கிறது. சூல்சோறுக்குப் பதில் சோறு கொடுத்துவிட்டு நெஞ்சை நிமிர்த்தி விளக்கமும் கொடுக்கும் கதாபாத்திரம் மிகநேர்த்தியாக செதுக்கப்பட்ட அழகான சிற்பமொன்றைப்போல நெஞ்சைவிட்டு அகலாமல் பதியமாகிப் போய்விடுகிறது. தன்மானத்தை சீண்டிப்பார்க்க நினைக்கும் உயர்வர்க்க மனிதர்களுக்கு தலையில் ஓங்கி குட்டும் வகையில் அமைந்துள்ள இக்கதையானது இந்த தொகுதியின் மகுடக் கதையாக நின்று மிளிர்கிறது.

ஏழைகள்களின் துன்பமும் பணம்படைத்தவர்களின் பகட்டும் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அழகாக படம்பிடித்துக்காட்டுகிறது "சகுவின்ஸ்" என்ற கதை இக்கதையை வாசிப்போர் நெஞ்சம் கனத்து கண்களில் கண்ணீரை வரவழைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அதேபோன்று "உயிர்ப்பு" பெண்ணுக்குள் சுயமரியாதை, தைரியம், தன்னம்பிக்கை போன்ற தேவையான பலவிடயங்களை உயிர்க்கச் செய்யும் கதையாக அமைந்துள்ளது. பெண் என்பவளும் எல்லா உணர்வுகளையும் கொண்ட மனிதப்பிறவியே என்பதை அழுத்திச் சொல்கிறது இந்தக்கதை.

இந்தத்தொகுதியிலுள்ள ஒவ்வொரு கதையையும் விரிவாக விவரித்தால் புத்தகத்தை வாசிப்பவர்களுக்கு "சூல்சோறு" ருசி தனியாகத் தெரியாது என்பதனால் நீங்கள் வாசித்தே அதன் சுவையை உணர்ந்து கொள்ளுங்கள்.

யதார்த்தமான எழுத்து நடையைக்கொண்ட இந்தத்தொகுதி மத்தியத் தரத்திலும் வறுமைக் கோட்டின் கீழும் வாழ்பவர்களின் பல்வேறு பிரச்சினைகளையும், பெண்கள் சமூகத்தில் முகங்கொடுக்கும் பிரச்சினைகளையும் வெவ்வொரு வகையில் புடம்போட்டுக் காட்டுகின்றன. இலக்கிய உலகின் வளர்ந்து வரும் எழுத்தாளர்கள், புதிதாக எழுத முயற்சிப்பவர்கள் சூல்சோறு தொகுப்பினை படிப்பது சாலச் சிறந்தது. தெளிவான, இலகுவான எழுத்துநடையுடன் மிகவும் நுண்ணிய உணர்வுகளை இலாவகமாக வெளிப்படுத்தும் பாணியும் கதைகளுக்கு உயிர்ப்பூட்டுகின்றன.

மிகநீண்ட ஓய்வின் பின்னர் காட்டாறாக பிரவாகித்து உயித்தெழுந்துள்ள எம்.ஏ. ரஹீமாவின் எழுத்துலகப் பயணம் வீரியமிக்கதாய் அமையுமென்பதை "சூல்சோறு" சிறுகதை தொகுதி கட்டியம் கூறுகிறது. எதிர்காலத்தில் இன்னும் பல இலக்கிய படைப்புக்களை எழுத்தாளரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

ஆஷிகா– கொழும்பு

# தோள்கொடுக்கும் தாய்

தேயிலையின் மூவிலைகள் கிள்ளி
தினம்கூடை நிரப்பிவரும் வள்ளி
ஆயிரந்தான் துன்பமது
ஆட்டிவைக்கும் போதிலும்தன்
சேயினையே அனுப்பிவைப்பாள் பள்ளி

தான்கற்க முடியாத கல்வி
தன்பிள்ளை கற்கவெனச் சொல்லி
வான்முட்ட நிற்குமலை
வரையேறித் தேயிலையைத்
தான்பறிப்பா ளங்கந்த செல்வி

கல்வியினால் எதிர்காலம் மாற்றம்
கட்டாயம் உருவாக்கும் ஏற்றம்
வெல்வதற்கே வழிகாட்டி
விண்தொடவும் வைக்குமெனச்
சொல்லிவழங் குவளத்தாய் ஊக்கம்.

மலையகத்தை மாற்றுமொரு சக்தி
மக்களிடம் கல்விதரும் புத்தி
இலைபறித்து முன்னேறா
இனமாகாத் தன்பிள்ளை
தலைநிமிர வகுத்திடுவள் யுக்தி

படிக்கின்றப் பிள்ளைக்கு நாளும்
பகுத்தறிவு வளர்வதற்கு மேலும்
இடித்துரைத்து வாழ்க்கையிலே
எட்டாத உயரமெலாம்
கொடிக்கட்டக் கொடுப்பாளே தோளும்

– மெய்யன் நடராஜ் –



முன்மாதிரிமிக்க நிர்வாகமும் ஊர்மக்களும், மாவனல்லை, மஹவத்த மஸ்ஜிதுல் ஜன்னா ஜும்ஆ பள்ளிவாயிலில் கடந்த 30 வருடங்களாக இமாமாக பணியாற்றிய கௌரவ மௌலவி M.M.M.மஸ்ஊத் காஸிமி ஹஸ்ரத் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சென்ற 19/01/2024 வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையுடன், கௌரவ தலைவர் அல் ஹாஜ் மிக் ஷாட் மற்றும் கௌரவ நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஊர் மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. ஹஸ்ரத் அவர்களை கௌரவிக்கும் வகையில் ஊர் ஜமாத்தினரால் 1,025,000/= பணமாக ஹஸ்ரத் அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஹஸ்ரத் அவர்கள் முழு ஊர்மக்களுக்கும் நன்றி செலுத்தி துஆவும் செய்தார்கள்.

(M.N.M.ANFAS DHEENI)



ஹெம்மாதகம ஹிஜ்ராகமையில் அமைந்துள்ள மாற்றுத்திறன் விசேட தேவை உள்ள மாணவர்களுக்கு சேவை செய்து வரும் தொண்டு நிறுவனம் SECDA அமைப்பின் நிர்வாகத்தின் தலைவராக அண்மையில் M.J.M. நய்முதீன் அவர்கள் நியமிக்கப்பட்டார். முன்னாள் பதுரிய்யா பாடசாலையின் அதிபராகவும் ஹெம்மாதகம HEDS பிரதேச கல்வி அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும் HMF - MEDIA FOURM அதன் ஆலோசகராகவும் செயல்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விஞ்ஞானி
## இப்ராஹிம் ஜவாஹிருக்கு விருது



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்செல்ஸ் உள்ள இலங்கை சர்வதேச அமைப்பு (Sri Lanka Foundation International - Los Anjeles) 2024ம் ஆண்டுக்கான சர்வதேச மட்டத்தில் வாழ்நாள் முழுதும் சாதனைகள் படைத்த இலங்கையர்களுக்கான விருதை இலங்கை விஞ்ஞானி பேராசிரியர் இப்ராஹிம் ஜவாஹிர் பெறவுள்ளார்கள்.

இவ் விஞ்ஞானி 450 ற்கு Nkwபட்ட ஆராய்ச்சிகளை செய்துள்ளதுடன் பல சர்வதேச Gold Medals களை பெற்றுள்ளார். பல சர்வதேச பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு முக்கிய சொற்பொழிவுகளை நடத்தியுள்ளார். பல பொறியியலாளர்கள், Masters> PhD பட்டதாரிகளை உருவாக்கியுள்ளார். அதுமட்டுமல்லாது சர்வதேச மட்டத்தில் முன்னணி கார் உற்பத்தி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு சிறந்த ஆலோசகராகவும் இருந்து வருகின்றார்.

அமெரிக்க ஆராய்ச்சி கூடத்தின் தலைவராக இருப்பதுடன் University of Kentucky யில் பேராசிரியராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் தனது ஆராய்ச்சிகள் மூலம் தனது விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்துக்கு 70 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான தொகையை கிடைக்க செய்துள்ளார்.

பல்கலைக்கழத்தில் பொறியியல் கற்கும் மாணவராக இருந்த காலத்தில் தமிழில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். சிங்கப்பூரில் உள்ள தமிழ் முரசு நடத்திய கட்டுரைப் போட்டியில் "மலர்ந்தும் மலராத" என்னும் தமிழ் கட்டுரையை எழுதி முதல் பரிசையும் பெற்றிருக்கின்றார்.

இவர் இலங்கையின் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் ளுமயனெயளயசழனயலய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராகும்.

தமிழை தாய் மொழியாக கொண்டதுடன் எங்கு சென்றாலும் குடும்ப நண்பர்களுடன் தமிழில் உரையாடுவது இவரது சிறப்பம்சமாகும்.

# வாழ்க உதயம் வளர்க உதயம்

## கலாபூஷணம் பரீட் இக்பால் - யாழ்ப்பாணம்

உலகிற்கோர் உதயமாக சூரியன் உதிப்பது போல முஸ்லிம் சமூகத்திற்கோர் உதயமாக உதிப்பது உதயம் பத்திரிகையாகும். இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம்களின் செய்திகளை மூடி மறைக்காமல் யதார்த்தமாக தெட்டத் தெளிவுடன் எடுத்துரைக்கும் பத்திரிகையாகத் திகழ்வது பாராட்டத்தக்க விடயமாகும். இலங்கையிலேயே முஸ்லிம்களுக்கென்று தனிச்சிறப்புடன் தன்னிகரற்ற பத்திரிகையாக வீரநடை போட்டுக் கொண்டிருக்கும் உதயத்திற்கு வாழ்த்துக்கள் பல கோடி.


இது வாராந்த பத்திரிகையாக எம்மோடு உறவாடும் ஒரு பொக்கிஷமாகும்.

எமது சமுதாயத்தின் மாற்றத்திற்காகவும் விழிப்புணர்வுக்காகவும் பத்திரிகை உலகில் மிக்க அநுபவம் வாய்ந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என் எம். அமீன் அவர்கள் உதயம் பத்திரிகையின் பிரதான ஆசிரியராக செயற்படுவது ஒரு வரப்பிரசாதமாகும்.

மேலும், இலங்கை முஸ்லிம்களின் அபிமான பத்திரிகையான நவமணி இல்லாத இடத்தையும் உதயம் ஈடு செய்கின்றது என்றால் மிகையாகாது.

இன்றைய நவீன உலகில் காலத்திற்கேற்றவாறு தன்னை நவீனமயமாக்கி அச்சு வடிவில் இல்லாமல் இணையத்தள பத்திரிகையாக தன்னை வடிவமைத்து வலம் வரும் உதயத்திற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாராந்த உதயம் பத்திரிகையானது எவ்வித தடங்கலுமன்றி வெளிவந்து சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதோடு உதயம் பத்திரிகையின் ஆசிரியர் என்.எம். அமீன் அவர்களின் முயற்சியையும் சமூகப்பற்றையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.



## மனநலமும் ஆலோசனையும்

16

# கணவரின் குடும்பத்துடன் உறவுகளைப் பேணுதல்

கணவரின் குடும்பத்துடன் எப்படி சேர்ந்து வாழ்வது, அவர்களுக்கு எப்படி மதிப்பளிப்பது, அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று எப்படி ஒரு அழகான குடும்ப வாழ்க்கை வாழ்வது என்று தெரியாமல் சங்கடமாக வாழும் பல மனைவிகள் தற்கால சமூகத்தில் இருக்கக் காண்கிறோம்.

தன் குடும்பத்தோடு சந்தோசமாக பழகுவது போன்று கணவரின் குடும்பத்துடனும் சந்தோசமாக, சமமாக பழகுவதன் முக்கியத்துவம் தெரியாததால் பல முரண்பாடுகள் ஏற்பட்டு குடும்ப உறவில் பாரிய விரிசல்களை சந்தித்து வருகின்ற பெண்களும் இருக்கிறார்கள்.

திருமணம் முடித்து விட்டால் நானும் எனது கணவனும் மட்டும் வாழ்ந்தால் போதும்...! அவரது தாய் தந்தையோ சகோதர சகோதரிகளோ அல்லது மற்ற உறவுகளோ தேவையில்லை என்று இவர்கள் நினைக்கின்றனர்.

அதேபோல் "நான் திருமணம் செய்திருப்பது எனது கணவரைத் தானே.. அவருடைய குடும்பத்தை அல்லவே.." என்ற தவறான எண்ணமும் மனநிலையும் சிலரிடம் உண்டு.

கணவன் தன் குடும்பத்தினருடன் ஒன்று சேர்ந்து நிற்பதையோ, அவர்களுக்கு ஆறுதல் கூறுவதையோ அல்லது அவர்களுக்கு எந்த விதத்தில் உதவுவதையோ அறவே விரும்பாத மனைவியும் இருக்கத்தான் செய்கிறாள்.

கணவரின் குடும்பத்தார்களிடம் உள்ள குறைகளை, பிழைகளை எடுத்துக் காட்டி அதாவது மாமியின் பிழை, மாமாவின் பிழை, மைணி மச்சான்களின் பிழை, என்று பலரின் பிழைகளை கணவரின் தலையில் போடும் போது சிலசமயம் கணவரும் மனைவி சொல்வதில் பிழையில்லை என்ற நிலைப்பாட்டுக்கு வரும் சந்தர்ப்பங்களும் உருவாக வாய்ப்பு உள்ளது. உண்மையிலேயே அவர்களிடம் பிழைகள் இல்லாமல் இருக்காது. அவர்களின் அனுகுமுறைகளில், பேச்சு முறைகளில், பழக்க வழக்கங்களில் என்று பல விடயங்களில் பிழைகள் மற்றும் தவறுகள் இருக்கலாம். ஒவ்வொருவரிடமும் ஏதேனும் பிழைகள் இருக்கத்தான் செய்யும். அவ்வாறே மனைவியிடமும் பிழைகள் இருக்கலாம்.

என்னவாக இருந்தாலும் கணவரின் குடும்பத்தால் மனைவிக்கு ஏற்படும் பாதிப்புக்களை, நடக்கும் பிழைகளை தன் கணவரிடம் சொல்ல வேண்டும் என்று அவள் நினைப்பதில் தப்பில்லை. ஆனால் கணவரின் குடும்பம் சார்ந்த பிரச்சனைகளை சொல்லும் சந்தர்ப்பங்களில் அவசரமோ ஆவேசமோ அடையாமல் மிகவும் நிதானமாக சிந்தித்து பிரச்சினைகளுக்கு அழகான தீர்வு காண வேண்டும் என்ற மனநிலையில் விடயங்களை சொல்வதே பொருத்தமாக இருக்கும். தன் மனைவி சொல்லும் விடயங்களை அமைதியாக செவிமடுத்து முதலில் அவளுக்கு ஆறுதலாகவும் உதவியாகவும் இருப்பதை உணரச் செய்வதுடன் பிரச்சினைகளின் போது பிளவுபடாமல் குடும்ப உறவை வளர்த்துக் கொள்வதில் பாலமாக இருப்பது சமரசமும் சமாதானமும் தான் என்பதை மெதுவாக புரியவைக்க முயற்சிப்பது தனது தலையாய கடமையாகும் என்பதை கணவன் புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கணவரின் குடும்பம் என்பது அவருடைய குடும்பம், அது அவர் வளர்ந்த இடம். அவரை வளர்த்தவர்கள் அங்கு இருக்கிறார்கள். நான் வாழ்க்கைத் துணையாக இல்லாதபோது அவருக்கு ஆதரவாக இருந்தவர்கள் அவரின் குடும்பத்தினர். நான் விரும்பி மணந்து கொண்டிருக்கும் என் கணவரை ஒரு அற்புதமான மனிதனாக மாற்றித் தந்தவர்கள் அந்தக் குடும்பத்தில் இருப்பவர்கள். அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டிய கடமை மருமகளாகிய என்னை சார்ந்து இருக்கிறது என்பதை மனைவி கட்டாயம் புரிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறாள்.

திருமணத்தின் தரத்தை மேம்படுத்துவதிலும் குடும்ப நல்வாழ்விலும் கணவரின் குடும்பத்துடன் நேர்மறையான உறவை வளர்ப்பது மிகவும் முக்கியமானது. உதாரணமாக கணவரின் குடும்பத்துடனான இணக்கமான உறவுகள் குழந்தைகள் வளர்ப்பில் ஆழமான, நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அப்பா, உம்மம்மா, மாமா, மாமி என பிற குடும்ப உறுப்பினர்களின் ஈடுபாடு குழந்தைகள் அதிக அன்பு, பாதுகாப்பு, ஊக்கம், கவனம் போன்றன கிடைக்க வாய்ப்பாகிறது. அதேவேளை பிள்ளைகள் சிந்தனையில், குழுப் பணிகளில் என பல அனுபவங்களை பெறுகிறார்கள். பழக்கவழக்கங்கள் பற்றிய பரந்த புரிதலையும் வளர்த்துக் கொள்கின்றார்கள்.

இவை பிள்ளை வளர்ச்சிக்கும் குடும்ப விருத்திக்கும் தேவையான ஒரு கலாச்சார கலவையாகும் என்பதை மனைவி புரிந்து கொள்ள வேண்டும். விடுமுறை நாட்களைக் கொண்டாடுவது, இரு தரப்பிலிருந்தும் குடும்ப சடங்குகளில் பங்கேற்பது போன்ற செயற்பாடுகள் ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறது. அத்துடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வைக்கிறது. குடும்ப கட்டமைப்பை பலப்படுத்தவும் செய்கிறது.

முரண்பாடுகளின் போது முடியுமான விதத்தில் உடன்பாடு காணும் மனைவியாக நீங்கள் இருந்தால் சிறந்த சமூகத்தை உருவாக்குவதில் மிக முக்கிய பங்குதாரியாக ஆகி விடுவீர்கள்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**



மன்னார், வேப்பங்குளம் – அளக்கட்டு, அல்– அறபா பாலர் பாடசாலையின் விடுகைவிழா கடந்த (19) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார். மேலும், முசலி பிரதேச பாலர் பாடசாலைகளுக்கான இணைப்பாளர் அமீருன் நிஸா மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# நோபல் உலக சாதனை



தமிழ்த் தொண்டன் பைந்தமிழ்ச் சங்கமும் நிலாவட்ட இலக்கிய அமைப்பும் சேர்ந்து நடாத்திய பத்தாயிரம் கவிதைகள் உலக சாதனைத் தொகுப்பு நூலான "கவித்தேனருவி" எனும் கவிதைத் தொகுப்பு தொகுப்பாசிரியர் கவிஞர் என். சாகிர் உஷேன் தலைமையில் ஏசுஆ மஹால் எருக்கஞ்சேரி வடசென்னையில் அண்மையில் (05) நடைபெற்றது.

இந்நூல் நூறு கவிஞர்களின் சிறப்பான நூறு கவிதைகள் வீதம் தொகுத்து உருவாக்கப்பட்டது. அதன் சிறப்பம்சமாகும்.

கவிதாயினி எஸ் செல்வி சிறப்பான நூறு கவிதைகளுடன் தனக்கென ஓரிடத்தைப் பெற்று நோபல் உலக சாதனை படைத்தமை பாராட்டுக்குறியதே.

இலங்கையில் கண்டிப் பிரதேச தெல்தோட்டை கலஹாவை பிறப்பிடமாகக் கொண்ட இவர் முகநூல் வாயிலாக கவிதை கதை பட்டிமன்றம் என பங்கேற்றும் எழுதியும் வருகிறார்.

முகநூலில் 800, மேற்பட்ட சான்றிதழ் மற்றும் சில விருதுகள், நடுவர் விருது, மேலும் சில புத்தகங்கள், வானொலி, பத்திரிக்கை, கணினியிலும் கவிதைகள் வலம்வருகின்றது.

பன்முகக் கவிதை எழுதுவதிலும் வளர்ந்து வரும் பல கவிஞர்களுக்கு வழிக்காட்டியாக இருந்து இலக்கியத் துறையில் தனது ஓய்வு நேரத்தை அர்ப்பணிக்கவே ஆர்வம் கொண்டுள்ளார்.




**பயாஸா பாஸில்**

# தொந்தி விழுகிறதா...??

வயிற்றில் தொந்தி விழுகிறதே என்று கவலையா....?? தினமும் ஐந்து மைல் தூரமாவது நடக்க வேண்டும். கொஞ்சம் விரைவாக நடக்க வேண்டும். தொந்தியைக் குறைக்க விரைவாக நடப்பதைத் தவிர சிறந்த பயிற்சி வேறெதுவுமில்லை.





# வாழைப்பூ கட்லட்

**தேவையான பொருட்கள்**

கழுவி சுத்தம் செய்த வாழைப்பூ - 100 g
உருளைக் கிழங்கு - 50g
வெங்காயம் - சிறிதளவு
பச்சை மிளகாய் - 5
இஞ்சி - சிறிய துண்டு
பாண் தூள் - சிறிதளவு
உப்பு - தே.அளவு
மசாலா தூள் - 2 டேபிள்ஸ்பூன்
எண்ணெய் - பொரிக்க
சீரகத்தூள் , மஞ்சள் தூள் , கறிவேப்பிலை , கொத்தமல்லி

**செய்முறை**

ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றவும். அதில் மிளகாய் , வெங்காயம், மஞ்சள் தூள், இஞ்சி, சீரகத்தூள், மிளகுத் தூள், மசாலாத்தூள், கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு வதக்கவும்.

சிறிதளவு தண்ணீர் சேர்த்து உப்பு, வாழைப்பூவை சேர்க்கவும். இத்துடன் வேகவைத்த உருளைக் கிழங்கை மசித்துப் போடவும்.

இந்தக் கலவையை நன்கு கிளறி உருண்டைகளாக செய்து அதை பாண் தூளில் பிரட்டிக் கொள்ளவும்.

பின்னர் இதை கனமானதாக தட்டி நொன்ஸ்டிக் கல்லில் இரு புறமும் சிவக்கும் படி பொரிக்கவும். புதினா இலை தூவி தக்காளி சோஸுடன் சாப்பிடலாம்.

# பெண் என்பவள் ஒரு சமூகத்தின் ஆணி வேர்

பிறக்கும் போது தன் பெற்றோரை மகிழ்விக்கும் குழந்தை யாருக்கும் பாக்கியம் தான்.

அது பெண் குழந்தையாகவோ ஆண் குழந்தையாகவோ இருக்கலாம். பிறந்து விட்டால் உள்ளம் பூரிப்படையும். சந்தோஷப்படும்.

கையில் ஏந்தப்பட்டு நெற்றி முத்தம் கொடுக்கப்பட்டு , குடும்பமே கொண்டாட காரணமாக அமையும்..

" ஆண் " என்றும் ஆணாகவே இருப்பான். எப்போதும் கம்பீரமாக.. முதுமையிலும் இளமையாக வீற்றிருப்பான்.

ஆனால்... பெண் ......????

ஒருகாலம் சுதந்திரப்பறவையாய் சுற்றித் திரிந்து , சந்தோஷித்து தன் பெற்றோருக்காய் வாழ்வது மிகவும் சொற்ப காலமே.. குறைந்தது இருபது வருடங்கள் மட்டுமே...

தன் கைப்பிடிக்கும் கணவனுக்காய் முதல் அடி எடுத்து வைத்ததிலிருந்து நிக்காஹ் என்ற கட்டுக்கோப்புக்குள் அவள் நுழைந்தது முதல் பெண் என்ற அடிப்படையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் நகர ஆரம்பிக்கிறாள். பரிணமிக்கிறாள்.

அங்கு அவளது விருப்பு வெறுப்புகள் பெரிதல்ல. காரம் , உப்பு, புளி, இனிப்பு, கசப்பு என பல சுவை கூடிய உணவுகள் போல பெண் என்பவளும் சகிப்பு, பொறுமை, தியாகம், பணிவு, அடக்கம் எல்லாவற்றை விடவும் அன்பு, பாசம் நிறைந்து காணப்பட வேண்டிய ஒரு ஜீவனாக மாறுகிறாள்.

இன்னும் சொல்லப் போனால் திசையை மாற்றிக் கொண்ட ஒரு படகு போல அவளது வாழ்க்கை ஓடம் பயணிக்க ஆரம்பிக்கும்.

மனைவியாய், மருமகளாய், தாயாய், இன்னுமின்னும் பல உறவுகளை சுமந்து பயணப்படுகிறாள். தன் வாழ்வையே பிறருக்காய் அர்ப்பணிக்கிறாள்.

பெண் என்பவள் வெறும் பெண் அல்ல.

ஒரு சமூகத்தின் ஆணிவேர்

# ஐசிசி இன் கனவு அணியில்
## திமுத் கருணாரட்னவும், உகண்டா வீரர் அல்பேஷும்



அரபாத் பஹுர்தீன்

கடந்த ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் மூவகைப் போட்டிகளுக்குமான கனவுப் பதினொருவர் அணி இன்று அறிவிக்கப்பட்டது. இதில் டெஸ்ட் அணியில் இலங்கை அணியின் தலைவரான திமுத் கருணாரட்ன இடம்பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு வருட முடிவிலும் அவ் வருடத்தில் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட வீரர்களை தெரிவு செய்து சர்வதேச கிரிக்கெட் பேரவையான ஐசிசி தமது பதினொருவர் கனவு அணியினை வெளியிட்டு வருகின்றது. அதற்கமைய கடந்த 2023 ஆம் ஆண்டுக்கான ஐசிசி பதினொருவர் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 கனவு அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### டெஸ்ட் அணியில் திமுத் கருணாரட்ன

கடந்த 2023 ஆம் ஆண்டுக்கான ஐசிசி இன் டெஸ்ட் கனவு அணியில் இலங்கை டெஸ்ட் அணியின் தலைவரான இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான திமுத் கருணாரட்ன பெயரிடப்பட்டுள்ளார். கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை அணி 6 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் பங்கேற்றிருக்க திமுத் கருணாரட்ன 6 போட்டிகளில் 60.8 என்ற துடுப்பாட்ட சராசரியுடன் ஒரு இரட்டைச் சதம் இரு சதங்கள் அடங்களாக 608 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மேலும் நியூசிலாந்து அணிக்கு எதிராக 207 ஓட்டங்களை விளாசியதுடன் அயர்லாந்து அணிக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட தொடரில் இரு சதங்களை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் டெஸ்ட் அணியின் தலைவராக அவுஸ்திரேலியா அணியின் தலைவரான பெட் கமின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் பெட் கமின்ஸ் கடந்த வருடத்தில் மட்டும் 11 போட்டிகளில் 44 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டியுள்ளதுடன் டெஸ்ட் சம்பியன் கிண்ணத்தை அவுஸ்திரேலியா அணிக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். மேலும் கடந்த டிசம்பரில் இடம்பெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் 5 விக்கெட் பிரதிகளை பதிவு செய்ததுடன் அத் தொடரை வெள்ளையடித்துக் கைப்பற்றவும் துணை நின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் அணியில் இந்திய அணியின் சுழல்பந்து சகலதுறை வீரர்களான ரவீந்திர ஜடேஜா மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவ் அணியில் மொத்தம் 5 அவுஸ்திரேலியா வீரர்களும், 2 இந்திய வீரர்களும், 2 இங்கிலாந்து வீரர்களும், நியூசிலாந்து மற்றும் இலங்கை அணியிலிருந்து தலா ஒரு வீரர்களுமான பதினொரு வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவ் அணியில் எந்தவொரு பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க வீரர்கள் உள்வாங்கப்படவில்லை.

### டெஸ்ட் அணி விபரம்

1. உஸ்மான் கவாஜா (அவுஸ்திரேலியா)
2. திமுத் கருணாரட்ன (இலங்கை)
3. கேண் வில்லியம்ஸன் (நியூசிலாந்து)
4. ஜோ ரூட் (இங்கிலாந்து)
5. ட்ரவீஸ் ஹெட் (அவுஸ்திரேலியா)
6. ரவீந்திர ஜடேஜா (இந்தியா)
7. அலெக்ஸ் கெரி (அவுஸ்திரேலியா)
8. பெட் கமின்ஸ் (அவுஸ்திரேலியா)
9. ரவிச்சந்திரன் அஸ்வின் (இந்தியா)
10. மிச்சல் ஸ்டாக் (அவுஸ்திரேலியா)
11. ஸ்டுவர்ட் ப்ரோட் (இங்கிலாந்து)







### ஒருநாள் அணியில் இந்திய வீரர்கள் ஆதிக்கம்

2023 இற்கான ஐசிசி இன் கனவு அணியில் இந்திய வீரர்களின் ஆதிக்கம் மிக அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. பதினொரு வீரர்கள் கொண்ட அணியில் 6 இந்திய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். இவ் அணியின் தலைவராகவும் ஆரம்ப வீரராகவும் இந்திய அணியின் தலைவரான ரோஹித் சர்மா பெயரிடப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடத்தில் 52 என்ற துடுப்பாட்ட சராசரியுடன் 1255 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மற்றைய ஆரம்ப வீரராக இந்திய அணியின் சுப்மன் கில் பெயரிடப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் நியூசிலாந்து அணிக்கு எதிராக 149 பந்துகளில் 208 ஓட்டங்களை விளாசியிருந்தார். மேலும் கடந்த ஆண்டில் 1584 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் 3 ஆம் இலக்க வீரராகப் பெயரிடப்பட்டுள்ள விராட் கோஹ்லி கடந்த 2023 ஆம் ஆண்டில் 1377 ஓட்டங்களை பெற்றதுடன் உலகக்கிண்ண தொடரில் சதங்களை விளாசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ் அணியில் உலகக்கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை வெளுத்தெடுத்த அவுஸ்திரேலியா வீரர்களான ட்ரவீஸ் ஹெட் மற்றும் அத் தொடரின் அதிகூடிய விக்கெட்டுக்களை கைப்பற்றிய அடம் சம்பா ஆகியோரும் தென்னாபிரிக்க அணி சார்பில் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான க்ளாசனும் சகலதுறை வீரராக ஜென்ஸனும் பெயரிடப்பட்டுள்ளனர். நியூசிலாந்து சார்பில் டெய்ரல் மிச்சலும் உள்ளவாங்கப்பட்டுள்ளனர்.

மேலும் மிகுதி 3 பந்துவீச்சாளர்களாக இந்திய அணியின் முஹம்மத் சிராஜ், முஹம்மத் சமி மற்றும் சுழல்பந்து வீச்சாளரான குல்தீப் யாதவ் ஆகியோர் இடம்பிடித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

### ஒருநாள் அணி விபரம்

1. ரோஹித் சர்மா (இந்தியா)
2. சுப்மன் கில் (இந்தியா)
3. விராட் கோஹ்லி (இந்தியா)
4. ட்ரவீஸ் ஹெட் (அவுஸ்திரேலியா)
5. ஹென்றிச் க்ளாசன் (தென்னாபிரிக்கா)
6. டர்லி மிச்சல் (நியூசிலாந்து)
7. மர்க்கோ ஜென்ஸன் (தென்னாபிரிக்கா)
8. அடம் சம்பா (அவுஸ்திரேலியா)
9. மொஹம்மட் சிராஜ் (இந்தியா)
10. மொஹம்மட் சமி (இந்தியா)
11. குல்தீப் யாதவ் (இந்தியா)


















### ஐசிசி இன் ரி20 அணியில் முதல் முறையாய் உகண்டா வீரர்

சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ள கடந்த வருடத்திற்கான ரி20 அணியின் தலைவராக இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரும் ரோஹித் சர்மா பங்கேற்காத போட்டிகளில் அணித்தலைவராகவும் செயற்பட்ட சூரியகுமார் யாதவ் பெயரிடப்பட்டுள்ளார். இவர் கடந்த ஆண்டு இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிராக அதிவேக சதங்களைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அவ் அணியின் ஆரம்ப வீரர்களாக இந்தியா அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான ஜாய்ஸ்வால் குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் 14 போட்டிகளில் 159 என்ற துடுப்பாட்ட சராசரியுடன் 430 ஓட்டங்களை எடுத்துள்ளார். நேபாளம் அணிக்கு எதிராக 49 பந்துகளில் 100 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. மற்றைய ஆரம்ப வீரராக இங்கிலாந்தின் பில் சோல்ட் குறிப்பிடப்பட்டிருக்க அவர் கடந்த வருடத்தில் மட்டும் 394 ஓட்டங்களை கடந்துள்ளார்.

அடுத்த இடங்களில் மேற்கிந்தியத் தீவுகளின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான நிக்கோலஸ் பூரான் (384 ஓட்டங்கள்), நியூசிலாந்து அணியின் மார்க் சப்மேன் (576 ஓட்டங்கள்) ஆகியோர் அடங்குகின்றனர்.

மேலும் சகலதுறை வீரராக சிம்பாப்வே அணியின் நட்சத்திர வீரரும் அணித்தலைவருமான சிக்கந்தர் ராசா பெயரிடப்பட்டுள்ளார். அடுத்த இடத்தில் முதன் முறையாக உகண்டா அணியின் வீரர் ஒருவர் ஐசிசி பதினொருவர் அணியில் இடம்பெற்றுள்ளார். இடதுகை சுழல்பந்து வீச்சு துடுப்பாட்ட வீரரான அல்பேஷ் ரம்ஜானி கடந்த வருடத்தில் 446 ஓட்டங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த இடங்களில் 2023 ஆம் ஆண்டில் 23 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கும் அயர்லாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான மார்க் எடயர் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளரான ரவி பிஸ்னோய் மற்றும் சிம்பாப்வே அணியின் இடதுகை வேகப்பந்து வீச்சாளரான ரிச்சர்ட் நக்ரவா ஆகியோருடன் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான அர்ஸ்டீப் சிங் ஆகியோரும் இவ் அணியில் பெயரிடப்பட்டுள்ளனர்.

### ரி20 அணி விபரம்

1. யஷஸ்வி ஜாய்ஸ்வால் (இந்தியா)
2. பில் சோல்ட் (இங்கிலாந்து)
3. நிக்கோலஸ் பூரான் (மேற்கிந்தியத் தீவுகள்)
4. சூரியக்குமார் யாதவ் (இந்தியா)
5. மார்க் சப்மேன் (நியூசிலாந்து)
6. சிக்கந்தர் ராசா (சிம்பாப்வே)
7. அல்பேஷ் ரம்ஜானி (உகண்டா)
8. மார்க் எடயர் (அயர்லாந்து)
9. ரவி பிஸ்னோய் (இந்தியா)
10. ரிச்சர்ட் நக்ரவா (சிம்பாப்வே)
11. அர்ஸ்டீப் சிங் (இந்தியா

மேலும் ஐசிசி இன் பதினொருவர் அணியில் உலகின் முன்னணி வீரர்களாக வர்ணிக்கப்படுகின்ற இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரும் தற்போதைய ரி20 அணியின் தலைவருமான வனிந்து ஹசரங்க, பாகிஸ்தானில் பாபர் அஸாம் மற்றும் ரிஸ்வான், அவுஸ்திரேலிய அணியின் மெக்ஸ்வெல் லபுசங்கே, இலங்கையின் வனிந்து ஹசரங்க தென்னாபிரிக்காவின் குயிண்டன் டி கொக் நியூசிலாந்து அணியின் ப்லிப்ஸ் போன்ற வீரர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐசிசி அணியை வழிநடாத்தும் சமரி அத்தபத்து

ஆடவர் அணிகள் போல் மகளிர் கனவு அணியையும் சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது. குறிப்பாக ஆடவர்களில் மூவகை போட்டிகளுக்குமான அணி பெயரிடப்பட்டிருக்க மகளிர் பிரிவில் ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளுக்கான கனவு அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஒருநாள் மற்றும் ரி20 ஆகிய இரு அணிகளுக்கும் தலைவியாக இலங்கை மகளிர் அணியின் தலைவியான சமரி அத்தபத்து பெயரிடப்பட்டுள்ளார். இவர் கடந்த ஆண்டில் மாத்திரம் 69.16 என்ற துடுப்பாட்ட சராசரியுடன் 415 ஓட்டங்களை பதிவு செய்துள்ளார். அத்தோடு குறிப்பிடத்தக்க விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தார். அதேபோல் ரி20 போட்டிகளிலும் அசத்தியுள்ள சமரி அத்தபத்து உலகின் பல முன்னனி வீராங்களைகளை கடந்து அணித்தலைவி பதவிக்குப் பெயரிடப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

மேலும் ஒருநாள் அணியில் 5 அவுஸ்திரேலிய வீராங்கனைகளும் , 2 நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளின் தலா ஒரு வீராங்கனைகளும் பெயரிடப்பட்டுள்ளனர். மேலும் ரி20 அணியில் தீப்தி சர்மா மாத்திரம் இந்திய அணியிலிருந்து உள்வாங்கப்பட்டிருக்க மற்றைய வீராங்கனைகளில் அதிகமானோர் அவுஸ்திரேலிய வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.